Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு +II

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 10 ஹிஜ்ரி 1427 ஸபர் 23 (24.03.2006) வெள்ளிக்கிழமை இதழ் 174

AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Your Training Partner

யாழ்.நகரில் linux முன்னோடிகளிடமிருந்து
Diploma in GNU/Linux Administaration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Sourse World Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command line operations
- Networking using Linux environment



New Batches Start on 26-03-2006

மேலதிக விபரங்களுக்கு
Drictor, AIMS Jaffna ,
# 118,பலாலி வீதி ,தபாற்பெட்டி சந்தி ,திருநெல்வேலி

Center for FOSS & LAMP

# சமாதானப்பொறி வைத்தவர்களை நாம் அதில் சிக்கவைத்துள்ளோம்!

## மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி

முல்லைத்தீவு —

சமாதானத்தின் பெயரால் பொறி வைத்த சிங்கள மற்றும் சர்வதேச சக்திகளை நாம் பொறியில் சிக்கவைத்துள்ளோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

முல்லைத்தீவு -முள்ளியவளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற புலிகளின் குரலின் முத்தமிழ்க் கலையரங்க நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் போக்குகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லும். நாங்கள் விடுதலைப் போராட்டத்தை மிகவும் உயர்ந்த இராஜதந்திரத்தோடும், நவீன படைத் தொழில்நுட்பத்தோடும் வளர்த்தெடுத்திருக்கின்றோம்.

தமிழீழ தேசியத் தலைவர் எமது விடுதலைப் போராட்டத்தை உயர்ந்த ஒரு நிலைக்குக் கொண்டுவந்துள்ளார்.

தென்னிலங்கையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான ஒவ்வொரு நடவடிக்கையும், கருத்துக்களும் எதிரிகள் எதிர்பார்த்ததைப் போல் இல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி

# புலிகளின் காவல்நிலை மீது மூதூரில் நேற்றிரவு தாக்குதல்

## போராளி உயிரிழப்பு; இருவர் படுகாயம்

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் - பூநகர் பகுதியில் விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்றின் மீது நேற்றிரவு 8.40 மணியளவில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் துணை ஆயுதக்குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் போராளி ஒருவர் உயிரிழந்ததாக இன்று அதிகாலை கிடைத்த தகவலொன்று தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் மேலும் இரண்டு போராளிகள் படுகாயமடைந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் இந்தச் செய்தி எழுதப்படும்வரை தெரியவரவில்லை. (04)

## இன்றைய இதழில்

- க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான நாக. தமிழிந்திரனின் தமிழ் மற்றும் செ. அருட்குமரனின் - பொதுச் சாதாரணபரீட்சை மாதிரி வினாத் தாள்கள்.
- துருவன் குறுக்கெழுத்துப் போட்டி - 02, பொது அறிவுப் போட்டி - 02 ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரங்கள்.

# சுதந்திரக் கட்சிக்கு தேர்தலில் பெரும் பின்னடைவு ஏற்படும்!

## புலனாய்வுத் தகவலால் மகிந்த அதிர்ச்சி

கொழும்பு —

அடுத்தவாரம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படக்கூடும் என்றும் -

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகியன கணிசமான வெற்றிகளைப் பெறக்கூடும் என்றும் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிர்ச்சியடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் வட-கிழக்கில் 6 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைபெறவுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் முதன் முறையாக நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஹெல உறுமய ஆகியன தனித்தனியே போட்டியிடுவதால் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மணற்காட்டில் கைதான இளைஞர் தடுப்புக்காவலில்!

யாழ்ப்பாணம் —

வடமராட்சி கிழக்கு- மணற்காடு பகுதியில் இராணுவக் காவலரண் மீது இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப்பிரயோகத்தின் பின்னர் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

மணற்காடைச் சேர்ந்த அன்ரன் பிரசன்னா (வயது 25) என்பவரே படையினரால் கைதாகி தொடர்ந்து தடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடிக்க மூன்று மாதங்களின் பின் அனுமதி!

# ஜே.வி.பி, ஹெலஉறுமயவின் தயவு அரசுக்கு அவசியம்!

# மூன்று மாதங்களின் பின் அனுமதி!

யாழ்ப்பாணம் —

வடமராட்சி கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் தொழில் செய்ய மூன்று மாதங்களின் பின்னர் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களையடுத்து வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கெருடாவில், அக்கரை, ஆதிகோவிலடி ஆகிய கடற்பரப்பில் கடற்தொழிலாளர்கள் தொழில் செய்யத் தடைவிதிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

அதேவேளை, மூன்று மாதங்களின் பின்னர் நேற்றுமுதல் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு தொழிலாளர்களுக்கு கடற்படையினரால் அனுமதி வழங்கப்பட்டது.

தொழில் செய்ய தடைவிதிக்கப்பட்டிருந்த பகுதியைச் சேர்ந்த கடற்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும், தொண்டமனாறு கடற்படை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை தொண்டமனாறு பெரிய கடற்கரை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே கடற்தொழிலாளர்கள் தடைவிதிக்கப்பட்ட பிரதேசத்தில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

படகுகள் வெள்ளைக்கொடியுடன் பகல் வேளையிலும், இரவு நேரங்களில் லாம்புடனும் தொழிலில் ஈடுபடவேண்டும். மற்றும், காங்கேசன் துறை கடற்பரப்பில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தயவு அரசுக்கு அவசியம்!



## என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு —

தமது அரசாங்கம் தொடர்ந்து இயங்குவதற்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவு அவசியமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டம் வியங்கொடவில் நேற்றுமுன்தினம் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரசாரக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அதன் ஆட்சிக்காலம் முழுமையும் நீடிக்கும் என்று தெரிந்த(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவலர் இருவரையும் புலிகள் விடுவிப்பு



திருகோணமலை —

திருகோணமலை ...துாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தபோது கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு ஊர்காவல் படையினர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இந்த ஊர்காவல் படையினர் கடந்த 14 ஆம் திகதி ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர் இவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் இன்று பூரண ஹர்த்தால்!

திருகோணமலை —

அரச படைகளின் செயற்பாட்டை கண்டித்து திருகோணமலையில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்கான அழைப்பை பொங்கி எழும் மக்கள் சமூகம் விடுத்துள்ளது. ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட விடயங்களை நடைமுறைக்கு கொண்டுவராமை, திருகோணமலை - மூதூர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் கடந்த இரு நாட்களாக கடற்படையால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு, அரசால் சமாதான காலத்தில் போடப்பட்ட கடல் வலயச் சட்டம் -

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்.....
EXPOAiR
021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
your friend in the skies...
இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமான சேவை...


# சிறப்புற நடைபெற்ற டானியலின் நூல் வெளியீட்டு விழா





யாழ்ப்பாணம்

கே.டானியலின் படைப்புக்கள் நூல் அறிமுக விழா நிகழ்வு நாவலர் கலையரங்கில் நேற்று மாலை 3 மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

நிகழ்வில் வரவேற்புரையை தேவி பரமலிங்கமும், தலைமையுரையை பேராசிரயர் அ.சண்முகதாஸும் நிகழ்த்தினர். தொடர்ந்து நூல் அறிமுகவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தெணியான், த.கலாமணி, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி செ.திருநாவுக்கரசு, க.தங்கவடிவேல் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து டானியலின் நூல் முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசனிடமிருந்து அருள்நங்கை பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன. டானியல் வசந்தனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. (ரி)

## இந்து கலாசார அமைச்சின் ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் வாராந்தம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இன்று குடாநாட்டின் அனைத்து இடங்களிலும் நடைபெறவுள்ளன.

*யாழ்நகரில்:-* நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 5 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் ரி.பிரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இங்கு இந்து சமய வாழ்வியலில் பெண்களின் பங்களிப்பு எனும் தலைப்பில் கதிரவேலு சிவயோகராணி சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார்.

*தென்மராட்சியில்:-* பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலயத்தில் அபிவிருத்தி உதவியாளர் சீ.மகிந்தினி தலைமையில் சொற்பொழிவு நிகழ்வு இடம்பெறும். இங்கு ஈழத்தில் முருக வழிபாடு எனும் தலைப்பில் இரா.ஈஸ்வரன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார்.

*வடமராட்சியில்:-* பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை அறநெறி பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் ரா.மாலதி தலைமையில் பிற்பகல் 4மணிக்கு நிகழ்வு இடம்பெறும் இங்கு அறநெறி சிந்தனைகள் எனும் தலைப்பில் திருமதி பொ.கிருஷ்ணசபாபதி சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார்.

*தீவகத்தில்:-* சரவணை தேவபுரம் ஸ்ரீவேலாயுத சுவாமி கோவிலில் நண்பகல் 12 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். இங்கு கந்த புராண கலாசாரம் எனும் தலைப்பில் சி.வேலாயுதம் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார்.

மேற்படி இடங்களில் இடம்பெறும் ஆன்மீக சொற்பொழிவுகளில் கலந்து பயன்பெறுமாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினர் கேட்டுள்ளனர். (ரி)

## கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கான மூன்றாம் கட்ட கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களை தவறாது சமுகமளிக்குமாறு நீதிவான் நீதிமன்ற பதிவாளர் க.மீரா கேட்டுள்ளார். (நீ, த)

## மினிபஸ் மோதியதில் வியாபாரி படுகாயம்

யாழ்ப்பாணம்

தனியார் மினிபஸ்ஸும் - மோட்டர் சைக்கிளும் மோதிக் கொண்ட சம்பவத்தில் மோட்டர் சைக்கிளில் பயணம் செய்தவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் 5 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோகுலரூபன் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

காக்கைதீவு பகுதியில் இருந்து இறால் வியாபாரத்துக்காக வந்து கொண்டிருந்த போது பொம்மைவெளி பகுதியால் வந்த மினிபஸ் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவரை மினிபஸ் சாரதியும் நடத்துனரும் அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொள்வதுடன் மினிபஸ்ஸை பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைத்தனர். (நீ.த)

## இலங்கை வங்கி அதிகாரிகளுடன் வணிகர்கழகப் பிரதிநிதிகள் சந்திப்பு!





யாழ்ப்பாணம்

இலங்கை வங்கி வடபிராந்தியப் பொதுமுகாமையாளர் பெர்னாண்டோவை யாழ்.வணிகர்கழக பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வணிகர்கழக அலுவலகத்தில் வணிகர் கழகத் தலைவர், செயலாளர் மற்றும் பிரதிநிதிகள் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய 8 விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

இலங்கை வங்கியானது கடந்த 20 வருடங்களாக புதிய ஆளணியினரைச் சேர்த்துக்கொள்ளாமையால் வயதுமுதிர்ந்த பணியாளர்களே சேவையில் இருப்பதால், வங்கியின் நடவடிக்கைகள் மந்தகதியிலே நடைபெறுவதாக எடுத்துக் கூறப்பட்டதாகவும் - பதிலளித்த வங்கிப் பிரதிநிதிகள் விரைவில் இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.

இலங்கை வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களுக்கு பணக்கொடுப்பனவுக்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் பொது மக்கள் மேலதிக கடன்களைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை சொத்துக்களை அடைமானம் வைத்து கடன்களைப் பெறும்போது 1 1/2 மாதத்துக்குப் பின்னரே கடன் வழங்கப்படுவதாகவும், இதனைக் குறுகிய காலத்துக்குள் தருமாறு கேட்டபோது 25 இலட்சத்துக்கு உட்பட்ட தொகையாயின் 2 வாரங்களுக்குள் தரமுடியுமென்றும் இதற்கு மேற்பட்ட தொகையாயின் விரைவில்தர முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சொத்துக்களை அடைமானம் வைத்து கடன் பெறும்போது சொத்தின் பெறுமதியின் அரைவாசியே கடனாக வழங்கப்படுகிறது. எனவே சொத்தின் பெறுமதியின் 70 வீதத்தை கடனாகத்தர நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் போர்ச் சூழ்நிலைகள் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டதால் வங்கிகளுடனான தொடர்புகள் குறைந்திருக்கலாம். எனவே கடந்த இரண்டு மூன்று வருடங்களாக சிறந்த வாடிக்கையாளரென இனங்காணப்பட்டவர்களுக்கு கடன் வழங் கவும் அத்தாட்சி கையெழுத்து வைக்கவும் அனுமதியளிக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த காலத்தில் வங்கிகளில் (லொக்கர்) பெட்டகங்கள் மூலம் பொது மக்கள் தமது உடமைகளை வைத்திருந்த போதும் - யுத்த சூழ்நிலைகளை அடுத்து பெரும்பாலானவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இதன் நிலைமைகள் தொடர்பாக கேட்டபோது - பெட்டகங்களின் உரிமையாளர்கள், உரித்துடையோர் அறிவித்து பெற்றுக் கொள்ளமுடியு மெனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வங்கிக் கிளைகள் சில நேரடி முறையில் செயற்படும் போது மின்சாரத்துண்டிப்பு காரணமாக முழு வேலைகளும் ஸ்தம்பிதமடைவது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கை வங்கியால் யாழ்.நகர அபிவிருத்தித்திட்டங்களுக்கு உதவுமாறு யாழ்.வணிகர் கழகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன் போதும் தாம் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டதோடு புனரமைக்கப்பட்டுவரும் சுப்பிரமணியம் பூங்காவின் பராமரிப்புச் செலவின் ஒரு பகுதியை தாம் ஏற்கமுடியுமெனவும் இலங்கை வங்கி தெரிவித்தது.

இந்தச் சந்திப்பானது பல இணக்கப்பாடுகளுடன் முடிவடைந்ததாக வணிகர் கழகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பில் இலங்கை வங்கியின் மேற்தரக்கிளை, கிளைகளின் முகாமையாளர்கள் கலந்து கொண்டனர். (கு.நி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்

வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு அண்மையில் நடத்திய க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசளிப்பு எதிர்வரும்26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.45 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என அதிபர் வன்னியசிங்கம் அறிவித்துள்ளார்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

கோவை பிறதேர்ஸ்

கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந், மீராஜஸ்மின் நடித்த



மெர்குரிப்பூக்கள்

பு. நேரம் : 10.30,2.00, 6.00,9.00

மனோகரா யாழ்ப்பாணம்



புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் அஷிமா மற்றும் பலர் நடித்த

சுதேசி

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

காட்சி:10.30, 1.30, 4.30, 7.30 (பு.நேரம்) விசேட காட்சி இரவு 10.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம்

இன்று மட்டும் -தங்கர் பச்சான், நவ்யா நாயர் நடித்த

சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி

நாளைமுதல்

விஷால், மீரா ஜஸ்மின் நடித்த

சண்டைக் கோழி

கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

முகாமைத்துவக் கல்லூரி இடமாற்றம்

*மேற்படி கரடிப்போக்குச் சந்தியில் இயங்கிவந்த முகாமைத்துவக் கல்லூரி 25.03.2006 (சனிக்கிழமை) தொடக்கம் ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம் அருகாமையில் இயங்கிவந்த ஆங்கிலக் கல்லூரி நடைபெற்ற இடத்தில் இயங்கவுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.*

இணைப்பாளர்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

[C/4453]

# சுனாமி அழிவுகள் கண்காட்சியில் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர்



ஒஸ்லோ—

தமிழர் தாயகப் பகுதிகளில் சுனாமி ஏற்படுத்திய பேரழிவுகளையும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்திட்டங்களையும் நோர்வே மக்களுக்கு எடுத்து விளக்கும் ஒளிப்படக் கண்காட்சி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றுவருகிறது.

ஒஸ்லோ மாநகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தக் கண்காட்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

இந்த நிகழ்வில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றைமோன்ட் ஜோகன்னன், வெளிநாட்டமைச்சின் உயர் அதிகாரிகளில் ஒருவரான பார்பறோ பக்க ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

நோர்வேக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

நினைவுச் சுடரை நோர்வே வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரி பார்பறோ பக்க ஏற்றியதைத் தொடர்ந்து பிரதி வெளிவிவகார அமைச்சர் றைமோன்ட் ஜோகன்னன் உரை நிகழ்த்தினார்.

தென்கிழக்காசியாவில் சுனாமி ஏற்படுத்திய விளைவுகள் பற்றியும்- இலங்கைத்தீவில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் அவர் தனதுரையில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

சுனாமியின் பின்னர் இலங்கைத் தீவுக்கு தான் பயணம் மேற்கொண்டபோது பாதிக்கப்பட்ட குடும்ப உறவுகளை இழந்த மக்களுடன் நேரடியாக உரையாடியதாகவும் அந்த அவலத்தை தான் நன்கறிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், சுனாமி பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நோர்வே அரசின் உதவியுடன் மீள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நோர்வே அரசு கடல்வள மீள் கட்டமைப்பு மற்றும் அழிவுற்ற பாடசாலைகளின் புனரமைப்பு பணிகள் சார்ந்த அபிவிருத்திகளில் அதிக அக்கறை கொண்டுள்ளது.

சுனாமி ஏற்படுத்திய மனிதப் பேரழிவு முரண்பாடுகளைத் தணித்து தீர்வு நோக்கிய பாதைக்கு இட்டுச் செல்லும் என உலகின் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நிலைமைகள் மோசமடைந்தமை கவலைக்குரியது என்றார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நேர்த்தியான திட்டமிடலுடன் கூடிய அர்ப்பணிப்பு மிக்க பணிகளை வெகுவாகப் பாராட்டிய றைமோன்ட் ஜோகன்னன் - இந்தக் கண்காட்சி பெருமளவான நோர்வேஜிய மக்களைச் சென்றடைய வேண்டும் என்று தனது வாழ்த்துரைகளையும் நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குத் தெரிவித்தார்.

நோர்வேஜிய மக்கள் மற்றும் நோர்வேஜிய பாடசாலை மாணவர்கள் பலரும் கண்காட்சியைப் பார்வையிட வந்திருந்தனர்.

ஒரு வார காலத்துக்கு காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இந்தக் கண்காட்சி நடைபெறும்.

சுனாமி ஏற்படுத்திய அழிவுகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உடனடி மீட்பு, புனர்வாழ்வுப் பணிகள், மீள்கட்டமைப்புச் செயற்திட்டங்கள் அகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த 160 பெரிய அளவிலான ஒளிப்படங்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படத்தினதும் பின்னணி பற்றிய செய்திகளும் படங்களின்கீழ் நோர்வேஜிய மொழியில் பதிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒஸ்லோவில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சி தொடர்ச்சியாக சுழற்சி முறையில் நோர்வேயின் பல்வேறு நகரங்களிலும் நடத்தப்படவுள்ளது என்று நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கண்காட்சி ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.

## தபால்மூல வாக்களிப்பு 30 ஆம் திகதிவரை நீடிப்பு

கொழும்பு—

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மார்ச் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20, 21 ஆம் திகதிகளில் வாக்களிக்கமுடியாது போனவர்கள் தேர்தல் நாளான எதிர்வரும் 30 ஆம் திகதிவரை வாக்களிக்கலாம் என்று தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இரு நாட்களில் வாக்களிக்க முடியாது போனவர்கள் தாங்கள் வாக்களிக்க முடியாமல் போனமைக்கான காரணத்தை தெரிவித்து - உறுதிப்படுத்தல் அதிகாரியிடம் வாக்களிப்பதற்காக பிறிதொரு நாளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தேர்தல் செயலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் நாளான 30 ஆம் திகதி மாலை 4 மணிக்குள் அனைத்து வாக்கு அட்டைகளும் உறுதிப்படுத்தல் அதிகாரிகளால் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# புனர்வாழ்வுக்கழக தொண்டர் கடத்தல்; அமெரிக்காவின் கவனம் தொடர்கிறது!

வொஷிங்டன்—

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அமெரிக்கா தொடர்ந்தும் கவனம் செலுத்திவருகிறது.

இவ்வாறு தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதான உதவி ராஜாங்கச் செயலாளர் டொனால்ட் காம்ப் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற ஆசிய பசுபிக் உபகுழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு நேபாளம் மற்றும் இலங்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அநேகமாக இலங்கையில் முறிந்து போகும் நிலையை எட்டியிருந்த போர்நிறுத்த உடன்படிக்கையைக் காப்பாற்றிய நோர்வே அரசு - ஜெனிவாப் பேச்சுவார்த்தைகளுக்குச் செய்த தரகு முயற்சியைப் பாராட்டிய அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் லீச் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் ஒரு வழிமுறையைக் காண்பதற்கு தவறியதாலும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக துணைப்படைகள் நடத்தும் தாக்குதல் நடவடிக்கையாலும், நீதியான, நிரந்தரமான தீர்வை இலங்கை அரசு காண்பது சுலபமல்ல என்று விடுதலைப் புலிகளின் தலைமை முடிவுக்கு வந்திருக்கலாம்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலையும், அரசியல் நோக்கம் கொண்ட கொலைகளும் சிங்கள மக்களை போர்நிறுத்த உடன்பாட்டுக்கு எதிராக தூண்டியிருக்கலாம் எனக் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளச் செய்வதற்கு நோர்வே எடுத்த முயற்சிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்குச் சர்வதேச சமூகம் எடுத்த முயற்சிகளை டொனால்ட் காம்ப் எடுத்து விளக்கினார்.

இலங்கை சமாதான நடவடிக்கைகள் புதிய பரிமாணத்தை எட்டுவதற்கு - பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டவர்கள் இரண்டு குறிப்பிடத்தக்க அம்சங்களைச் சாதித்தனர்.

ஆயுதக் குழுக்கள் பற்றி அரசு குறிப்பாகக் கவனம் செலுத்தியது. இது தமிழ் மக்களின் மிக முக்கிய கவலையாகும். அரசாங்கம் - பாதுகாப்புப் படைகள் தவிர்ந்த எந்த ஆயுதக் குழுவோ, தனிநபரோ ஆயுதங்களை ஏந்தவோ, தாக்குதல்களை நடத்தவோ அனுமதிக்கமாட்டாது என்று ஒப்புக் கொண்டது.

இதேவேளை, பாதுகாப்புப் படைகளுக்கு எதிராகவோ, பொலிஸாருக்கு எதிராகவோ வன்செயல் நடவடிக்கைகள் எதுவும் நடக்காதென்பதை விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்தியிருப்பது மற்றைய அம்சமாகும்.

இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதிலிருந்த கஷ்டங்களைச் சமாளித்து - இருதரப்பும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெனிவாவில் மீண்டும் ஏப்ரல் 19-21 இல் கூடுவதென்று இருதரப்பும் செய்துள்ள முடிவு பெரும் சாதனையாகும்.

சமீபத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் கடத்திச் செல்லப்பட்டதன் பின்னர் இவர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கதென்று தெரிவித்தார். இந்தக் கடத்தல் சம்பவம் நடந்ததும் தூதுவர் ஹன்ஸ் ரெட் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கவலை தெரிவித்தார்.

எங்கள் தூதராலும் பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிடப்பட்டது. இதில் எங்கள் கவலையைத் தெரிவித்துடன் பொறுமைகாக்குமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தோம். இலங்கை அரசு இதுபற்றி இன்னமும் விசாரணை நடத்தி வருகிறது. நாங்களும் இது பற்றிக் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம் என்று டொனால்ட் காம்ப் தெரிவித்தார்.

# அரசின் சமாதான வெற்றிக்கு தென்னிலங்கையில் ஒற்றுமை அவசியம்

## மகிந்த சமரசிங்க கூறுகிறார்

கொழும்பு—

சமாதான முயற்சிகளில் வெற்றி பெற தென்னிலங்கையின் ஒற்றுமை மிக அவசியமானது என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

அனைத்து அரசியல் கட்சியினரும், பொதுமக்களும் அமைதி முயற்சிகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படவேண்டும். நீண்டகாலமாக இதுவிடயத்தில் தென்னிலங்கை பிளவுபட்டிருப்பதால் அமைதி முயற்சிகளில் வெற்றி பெற முடியவில்லை.

இதே வேண்டுகோளை முன்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுத்திருந்தேன். சில ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக எம்மைக் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார். ஆகையால் ரணில் விக்கிரமசிங்க அமைதிப் பேச்சுக்களுக்காக மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

தென்னிலங்கை பிளவுபட்டிருப்பதால் விடுதலைப் புலிகள் அதைச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனையில் ஆணின் சடலம் மீட்பு

அக்கரைப்பற்று—

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை நான்காம் குறிச்சிப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை அடையாளங் காணப்படாத 35 வயது மதிக்கத்தக்க இந்தச் சடலம் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் மீட்கப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கபார் தெரிவித்தார்.

இந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக அக்கரைப்பற்று- எழுவட்டுவாள் மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு சபை உறுப்பினர் நியமனத்தில் முட்டுக்கட்டை!

கொழும்பு—

அரசியல் யாப்பு சபை உறுப்பினர் நியமன சர்ச்சை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பு சபைக்கான சிறுபான்மை கட்சிகளின் உறுப்பினரை எந்தக் கட்சி பரிந்துரைப்பது என்பதில் முட்டுக்கட்டை நீடித்து வருகிறது.

இதுதொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் அரசாங்கத் தரப்பு விவாதித்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா - சிறுபான்மை கட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக்குப்பிறகு அரசியல் யாப்பு சபை விரைவில் இயங்குவதற்கு ஏதுவான பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்.

அரசாங்கத்தில் ஜே.வி.பி இணைந்திருப்பதால் ஜே.வி.பியை தனித்துச் சிறுபான்மைக் கட்சி என்ற நிலையில் பரிந்துரைக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாதிட்டு வருகிறது.

ஆகையால் யாப்பு சபைக்கான சிறுபான்மை உறுப்பினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் பரிந்துரைக்கும் என்றும் அதன் தலைவர் இரா.சம்பந்தன் முன்னர் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும் அரசியல் யாப்பு சபைக்கான உறுப்பினரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஜே.வி.பியின் சார்பில் ஏற்கனவே பேராசிரியர் உபாலி ஜயசேகர பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை - அடுத்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவிப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் ஜோசப் மைக்கேல் பெரேரா தெரிவித்தார்.

## கொட்டகதெனியவின் மனு விசாரணைக்கு!

கொழும்பு—

இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற உத்தரவிடுமாறுகோரி தாக்கல்செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய தாக்கல் செய்த இந்த மனு எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் 200 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவரை கைதுசெய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த பிடியாணையைச் செயற்படுத்தி அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை அமுல்படுத்துமாறு மனுவில் கொட்டகதெனிய கோரியுள்ளார்.

# நோர்வே அனுசரணை பணிகள் தொடரும்!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



கொழும்பு—

இங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயின் அனுசரணைப் பணியை முன்னெடுக்க அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா:-

நோர்வே தரப்பினரின் அனுசரணையை அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்பார்த்துள்ளது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு பல கொள்கைகளைக் கொண்டவர்கள் உள்ளனர். அவர்கள் தமக்குள்ள ஜனநாயக உரிமைகளைக்கொண்டு நடத்தும் கோஷங்களையும், போராட்டங்களையும் அடக்குவதற்கு மகிந்த சிந்தனையின் அடிப்படையில் முற்படமாட்டோம்.

எனினும், அரசாங்கம் நோர்வே சமாதான செயற்பாடுகளின் அனுசரணைப் பணியில் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# 'வீரர்களின்' கிரிக்கெட் போர் இன்று ஸ்கந்தாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ் ஸ்கந்தவரோதய மற்றும் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி இன்றும், நாளையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமை தாங்குகிறார். ஸ்கந்தவரோதய கல்லூரி அணிக்கு கு.நிஷாகரனும், மகாஜனக் கல்லூரி அணிக்கு ஜே.ஜெயப்பிரியந்தனும் தலைமை தாங்குகின்றனர்.

## ஸ்கந்தவரோதய கல்லூரி



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)**

ஜெ.ஜெயகிருஷ்ணன் (உதவிப்பயிற்றுநர்), வ.நந்தீஸ்வரன் (அணிப்பொறுப்பாசிரியர்), சி.மகேந்திரன் (உபஅதிபர்), சு.கஜந்தன் (உபஅணித்தலைவர்), க.சிவாஜி (அதிபர்), கு.நிஷாகரன் (அணித்தலைவர்), இ.ஜோர்ஜ் (பிரதிஅதிபர்), ஆறு.திருமுருகன்(உபஅதிபர்), மு.நடராஜா (விளையாட்டுத்துறை முதல்வர்),

**நிற்பவர்கள் முதல் வரிசை (இடமிருந்து வலம்)**

க.நிரோஜன், கு.செபஸ்ரீபன், க.ரமணன், யோ.ரஜீவன், செ.சதீஸ்வரன், சு.அருட்குமரன், ஹே. பிரகாஷ், கே.சஞ்சயன், க.விஷ்ணுபிரகாஜ்,

**நிற்பவர்கள் இரண்டாவது வரிசை (இடமிருந்து வலம்)**

ச.இந்திரகுமார், தே. சசிக்குமார், எ,ஜெலன்ஸ், சு.தினேஸ்குமார், இ.பிரசாத், அ.லதீஸ் மு.குமரறூபன் (பயிற்றுனர்)

## மகாஜன கல்லூரி



**இருப்பவர்கள்**
**(இடமிருந்து வலம்)**

என்.புதிததயாபரன் (விளையாட்டு முதல்வர்), ஜி.பிரபாகரன் (உதவிப்பயிற்றுனர்), ஜே.ஜெயப்பிரியந்தன் (அணித்தலைவர்), பி.சுந்தரலிங்கம் (அதிபர்), பி.ஜீவசங்கர் (உபஅணித்தலைவர்), ஈ.வி.கே. ஜோன்சன்,

**நிற்பவர்கள்**
**(இடமிருந்து வலம்)**

கே.மாதவன், எஸ்.அகுலன், ஆர்.டிக்சான், ஆர்.திலீபன், என்.திலீபன், எம்.எல்மோநிக்ஷன், ஏ.அருட்செல்வன், வி.புவனீசன், ரி.மயூரன், கே.பிரகலாதன், ஆர். தர்சன்,
கே.மயில்வாகனம் (அணிப்பொறுப்பாசிரியர் )
என்.சிறீதரன் (பயிற்றுனர்),

## ஆசிரியர் கலாசாலைமட்ட வலைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம் —

ஆசிரியர் கலாசாலைகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும், ஆண்கள் பிரிவில் பலாலி ஆசிரியர் கலாசாலையும் வெற்றிபெற்றுள்ளது.

இதில் முதலில் பெண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அணியினர் பலாலி கலாசாலை அணியை 25:16, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை 25:17, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றனர். (12)

## தேசிய வலைப்பந்தாட்டத்தில் பங்குபற்றவுள்ள யாழ்.அணி

யாழ்ப்பாணம் —

நாளையும், நாளைமறுதினமும் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ள வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் ஆண், பெண் அணிகள் இன்று கொழும்புக்குச் செல்லவுள்ளன.

ஆண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், யாழ்.மாவட்டத்திலிருந்து செல்லும் ஆண்கள் அணி முதன் முறையாக பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தகக்கது.

2003ஆம் ஆண்டு முதன்முறையாக பங்குபற்றிய யாழ்.மாவட்ட கலப்பு அணி, தங்கப்பதக்கம் வென்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள யாழ்.மாவட்ட பெண்கள், ஆண்கள் அணிகளின் விபரம் வருமாறு -

பெண்கள் அணி :

நிலாந்திபாலகிருஷ்ணன்(தலைவி), சியாமளா சூடாமணி (உபதலைவி), வாசுகி திருநாவுக்கரசு, தயாளினி செல்வராஜா, ஜெரால்டின் றெமின்டா ஜோன் விக்ரர், பிருந்தா சோமசுந்தரம், சிறிகாயத்திரி திருநாவுக்கரசு, மயூரி கந்தசாமி, வினோஜா எழில் மோகன், கௌசிகா சோமசுந்தரம், மயூறினி குணரட்ணம், பபித்தா வசந்தகுமார், மேனகா சிதம்பரநாதன், ஆஷா சந்திரிக்கா புவனேஸ்வரன்.

ஆண்கள் அணி :

சூடாமணி அகிலன் (தலைவர்), இருதயநாயகம் சசிகுமார் (உபதலைவர்), செல்வராஜா ரமணன், மதிவதனன் மரியதாஸ், கனகரட்ணம் கனகராஜா, தங்கன் இன்பதாஸன், ஆனந்தகிருஷ்ணன் கமலகுமார், புவனேஸ்வரன் டினேஷ்குமார், தேவராஜா திவாகர், காசிநாதர் பிரசாத், வடிவேலு செந்தூரன், பரராஜசேகரம் பார்த்தீபன்.

## விளையாட்டு

### விளையாட்டுப்போட்டி

வடமராட்சி —

வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் காலை 8 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு கோட்டமட்டப் போட்டிகளிலும் தெரிவு செய்யப்பட்ட முதல் 3 இடங்களையும் பெற்ற வீர, வீராங்கனைகள் வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றலாமெனவும், மாணவர்களை உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

## தென்மராட்சி பிரதேச செயலக துடுப்பாட்டம்: தென்னகத்தாரகை இரு பிரிவுகளிலும் வெற்றி

தென்மராட்சி —

தென்மராட்சி பிரதேச செயலக மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழங்களிடையிலான குழு நிலைப் போட்டியில் பெண்கள் ஆண்களுக்கான துடுப்பாட்டத்தில் தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

மேற்படி இறுதிப்போட்டிகள் கடந்த 14ஆம் திகதி மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டரங்கில் இடம்பெற்றது. பெண்களுக்கான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வளர்மதி விளையாட்டுக்கழக அணி 3.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 23 ஓட்டங்களை எடுத்தது. சுதர்சினி வினோதா ஆகியோர் முறையே 13,3 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுமித்திரா 2 விக்கெட்டுக்களையும், பிரதீபா 1 விக்கெட்டையும், விஜந்தினி 1 விக்கெட்டையும் செல்வமணி 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னகத் தாரகை விளையாட்டுக் கழகம் 4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டக்களையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. பிரதீபா, செல்வராணி ஆகியோர் தலா 6 விக்கெட்டுக்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அனுசா, சுதர்சினி ஆகியோர் தலா 6 ஓட்டங்களைக் கைப்பற்றினர்.

ஆண்களுக்கான போட்டியில் தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகம் போட்டியிட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மின்னொளி விளையாட்டுக்கழகம் 15 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சதீஸ், ராஜேஸ் கண்ணா ஆகியோர் முறையே 24, 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரூபன் 3 விக்கெட்டையும் தனஞ்செயன் 2 விக்கெட்டையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னகைத்தாரகை விளையாட்டுக்கழகம் 12.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் முகுந்தன், ஜீவிதன் ஆகியோர் முறையே 33,10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சதீஸ் 4 விக்கெட்டையும் மயூரன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். (24)

## வலிமேற்கு பிரதேச செயலக தடகள போட்டிகள் ஆரம்பம்


சங்கானை —

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள்- நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறவுள்ள விளையாட்டு நிகழ்வுகள் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியில் காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் நடைபெறும் நிகழ்வுகள், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

வலிமேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் கே.கணேஸ், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றொகான் இராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை மறுதினம் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் குழுநிலை விளையாட்டாக கபடி இடம்பெறவுள்ளது. இதில் சங்கானை யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வட்டு. வை.எம்.எச்.ஏ அணி மோதவுள்ளது. அத்துடன் இடைவேளை நிகழ்வாக சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய உடற்பயிற்சி அணியினரின் உடற்பயிற்சி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (47)



அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்றுவரும் 18ஆவது கொமன்வெல்த் போட்டிகளில் - ஆண்கள் ஒற்றையர் பிரிவு பட்மின்ரன் போட்டியில் இலங்கையின் நிலுகா கருணாரட்ண, கனடாவின் றொபேட் மில்றோயைத் தோற்கடித்தார்.

# தோட்டத்தில் அகழ்ந்த மண்ணை மீளவும் நிரப்புவதற்கு உத்தரவு!

## வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை தீர்ப்பு

சங்கானை—

காணி உரிமையாளர்களின் அனுமதியின்றி சட்டவிரோதமாக தோட்டக்காணி ஒன்றில் மண் அகழ்ந்த நபரை, காணியில் அகழ்ந்த அதேயளவு மண்ணை மீண்டும் போட்டு அகழ்ந்த இடத்தை நிரப்புமாறு - வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை, சமாதான இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது - வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மங்களேஸ்வரி சரவணபவன் என்பவரது தோட்டக்காணி யொன்றில் - அவரது அனுமதியின்றி அதேயிடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் உழவு இயந்திரம்மூலம் 40 லோட் வரை மண் அகழ்வு செய்து விற்பனை செய்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக காணி உரிமையாளர் தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட வலி.மேற்கு மத்தியஸ்தர் சபைக்கு இந்த விடயத்தை எழுத்துமூலம் சமர்ப்பித்திருந்தார்.

மத்தியஸ்தர் சபை இவ்விரு பகுதியினரையும் விசாரணைக்கு அழைத்து இரு பகுதியினரின் சம்மதத்தோடு மண் அகழ்ந்த நபரை அந்தக் காணியில் தன்னால் அகழ்வு செய்யப்பட்ட மண்ணை நிரப்பித் தருவதாகச் சம்மதம் தெரிவித்து இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார்.

வலி.மேற்கில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட மத்தியஸ்தர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது காணிப் பிரச்சினை சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டதாக சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும் காணி, குடும்பப் பிரச்சினை, எல்லைப்பிரச்சினை மற்றும் எந்தப் பிரச்சினைகளையும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லமுன் தங்களை அணுகினால் அதற்கான இணக்கப்பாட்டை தீர்த்துவைக்க தங்கள் சபையால் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சபையினர் தெரிவித்தனர். (48)

## சமுர்த்தி முத்திரைக்கான பணக்கொடுக்கல் நாட்கள்

நல்லூர்—

நல்லூர் பிரதேச செயலகத்தின் திருநெல்வேலி வங்கிச் சங்கத்தின் கீழ்வரும் பதினொரு கிராம சேவகர் பிரிவுகளில் சமுர்த்தி முத்திரை பெற்ற குடும்பங்களின் காசுக்கொடுப்பனவும், கட்டிய சேமிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய படிவங்களை பதிதலுமான செயற்பாடுகள் நாளை முதல் 31 ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை திருநெல்வேலி சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது உரிய குடும்பங்களின் தலைவர்கள் அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை, சமுர்த்தி அங்கத்தவர் கணக்கு புத்தகம் மற்றும் முத்திரை என்பவற்றுடன் சமூகமளிக்கவேண்டும் என்று வங்கி முகாமையாளர் ஏ.பிரபாகரன் அறிவித்துள்ளார். இதன்படி:

23ஆம் திகதி ஜே/97, 24 ஆம் திகதி ஜே/113, ஜே/110, 27ஆம் திகதி ஜே/103, 28 ஆம் திகதி ஜே/105, ஜே/102, 29 ஆம் திகதி ஜே/100, ஜே/101, 30 ஆம் திகதி ஜே/104, ஜே/98, 31ஆம் திகதி ஜே/114 ஆகிய தினங்களில் இந்தக் கொடுப்பனவுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (110)

### ஆலய உண்டியல் திருட்டு

மூளாய்—

மூளாய் மேற்கு கம்மானை வைரவர் ஆலய திருப்பணி உண்டியல் கடந்த 19 ஆம் திகதி இரவு திருடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்தத் திருட்டுச் சம்பவத்தில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் உண்டியலுடன் சேர்ந்து திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (207)

### 'கலைப்பூமி' நூலுக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

உடுவில்—

வலி.வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவை 'கலைப்பூமி' என்னும் நூலை வெளியிடவுள்ளது.

இந்தப் பிரதேச எல்லைக்குள் வசிக்கின்ற - வளர்ந்துவருகின்ற- மறைந்த கலைஞர்களின் விபரங்களை உள்ளடக்கி இந்த நூல் வெளியிடப்படவிருப்பதாகவும், இதற்கான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் கலாசார அலுவலருடனோ அல்லது -

021 222 3952 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களைப் பதிவுசெய்யுமாறும் மா.அருள்சந்திரன் கேட்டுள்ளார். (101)

### தடகள விளையாட்டு விழா

சங்கானை—

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவின் தடகள விளையாட்டு விழா நாளை மறுதினம் காலை 9 மணிமுதல், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பிரதேச செயலர் சீ.ஏ மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ்.தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் வே.வீரகத்திப்பிள்ளை, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றொகான் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் க.வ.கானமயில்நாதன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (48)

### இலக்கியப் பெருவிழாவுக்கு ஏற்பாடு

உடுவில்—

வலி.வடக்கு பிரதேச செயலகம் அந்தப் பிரதேசத்துக்குட்பட்ட மாணவர்கள், கலை ஆர்வலர்களுக்கிடையே இலக்கியப் போட்டிகளை நடத்தி இலக்கியப் பெருவிழா கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

கவிதை, சிறுகதை, கட்டுரை விமர்சனங்கள் என்பன போட்டியில் இடம்பெறவுள்ளதால் இவற்றில் பங்குபற்ற விரும்புவோர் உடனடியாக பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

### வீதி புனரமைப்பு பணிகள்ஆரம்பம்

மட்டுவில்—

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு மேற்குப் புறமாக கைதடி - நுணாவில் சந்தி வரை செல்லும் சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான வீதியில் புனரமைக்கப்படாதிருந்த 1 கிலோ மீற்றர் நீளமான பகுதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பங்குனித் திங்கள் மூன்றாம் கிழமைக்கு முன்பாக இந்த வீதி புனரமைக்கப்பட்டுவிடுமென, தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பன்றித்தலைச்சி அம்மன் உற்சவ ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடலில் - வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (24)

### 20 வருடங்களாக திருத்தப்படாத வீதி

திருநெல்வேலி—

கந்தர்மடம் புகையிரத வீதி கடந்த 20 வருடங்களாக திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியால் மாணவர்கள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் வர்த்தகர்கள் எனப் பலரும் பயணம் செய்வதோடு யாழ்.நகருக்கு விரைவாகச் செல்வதற்கும் பலர் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழக் கூட்டத்தில் இந்த வீதிப் பிரச்சினை குறித்து பிரஸ்தாபித்தும் இன்றுவரை முயற்சி ஏதும் எடுக்காமை மிகவும் கவலை தருவதாகும் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மழை காலத்தில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படும் இந்த வீதியை எவ்வளவு விரைவாக சீர்செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக மக்கள் நன்மை பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (110)

## ஆயிரம் ரூபா கள்ளநோட்டு! திருநெல்வேலியில் சிக்கியது

யாழ்ப்பாணம்—

திருநெல்வேலியில் உள்ள அரச வங்கி ஒன்றில் பணத்தை வைப்பிலிட வந்த பெண் ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபா கள்ளநோட்டை வங்கி அதிகாரிகள் நேற்று கண்டுபிடித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வைப்பிலிடச் சென்ற பெண்ணிடமிருந்து மேற்படி கள்ள நோட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வங்கி அதிகாரி அதனை துளையிட்டதுடன் மேற்படி நோட்டை வழங்கிய வங்கியில் சென்று இதுதொடர்பாகக் கேட்குமாறும் அறிவுரை வழங்கியதாகத் தெரிய வருகிறது. (110)

## கைத்தொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

சாவகச்சேரி—

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் தென்னம் தும்பைப் பயன்படுத்திச் செய்யப்படும் கைத்தொழில் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென சாவகச்சேரி பகுதிக்குட்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சி பெற விரும்புவர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக தமது சுயவிபரங்களுடன் விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 100 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தமது சுய விபரங்களில் தந்தை,தாயின் தொழில், வேலை பார்க்கும் சகோதரர்களின் விபரங்கள், வெளிநாட்டில் உள்ள சகோதரர்களின் விபரங்கள் போன்றவற்றையும் உள்ளடக்குமாறு கோரப்பட்டுள்ளது. (24)

## முழுநேர ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய முழுநேர ஊடகவியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 9 மணிக்கு யாழ். ஜும்மா பள்ளிவாசல் தெருவில் உள்ள ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் - யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அருட்தந்தை நிக்கலஸ் அடிகளார், யாழ்.பல்கலைக்கழக முன்னாள்-துணைவேந்தர் சு.மோகனதாஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை ஊடகவள பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சண்முகதாஸ் நிகழ்த்தினார். வாழ்த்துரையை உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த குமாரதாஸ், யாழ். தினக்குரல் முகாமையாளர் நடராஜா, டெனிஸ் ஊடக ஆலோசகர் ஹென்றிக் குறுநெட் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சு. மோகனதாஸ் நிகழ்த்தி னார்.

இந்த நிகழ்வில் முழுநேரப் பயிற்சியைப் பெறும் மாணவர்கள், மாணவிகள், பெற்றோர்கள் ஊடக நிறுவனத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

## விளையாட்டு மைதானத்துக்கு மட்டுவிலில் காணி கொள்வனவு

மட்டுவில்—

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலையினரும், மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக் கழகத்தினரும், இணைந்து விளையாட்டு மைதானம் ஒன்று அமைப்பதற்கு என 30 பரப்புக் காணியொன்றைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இவர்கள் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள காணியைக் கொள்வனவு செய்ததன்மூலம் பாடசாலையினதும், விளையாட்டுக் கழகத்தினரதும், மைதானத் தேவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்தும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் ஊர்மக்களதும் நிதிப்பங்களிப்புடன் இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காணி கொள்வனவுக்கான நிதியில் குறிப்பிட்ட அளவு கடனடிப்படையில் உள்ளதாகவும், அதனை மீளளிப்பதற்கும், மைதானத்தைப் புனரமைப்பதற்கும் மேலும் பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும் பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார். (24)

## நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு விழா

நல்லூர்—

நல்லூர் பிரதேச செயலக பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் பி.ப 2.30 மணிக்கு யாழ்.இந்துக் கல் லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் சுகுணாவதி தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புனரமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கமலா சிவசிதம்பரமும், சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வீ. கணேசராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (110)

## தவக்கால நற்சிந்தனை



அன்று கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருந்தும், அதனை உணராத அந்த மக்கள், நிறைவின்றிச் செங்கடல் சாலை வழியாகப் பயணப்பட்டபோது பொறுமை இழந்து கடவுளுக்கும், மோசேசுக்கும் எதிராக வெறுப்புடன் பேசினர்.

இதனால் அவர்களுக்கு நன்மை எதுவென உணர்த்தும்படி கடவுள் உடனே கொள்ளிவால் பாம்புகளை அனுப்பவே, மக்களில் பலர் கடியுண்டு இறக்கவே, பின் மனம்நொந்து மோசேசிடம் கூறி, கடவுளிடம் வேண்டியதால் அதற்கு மாற்று உதவி கிடைத்தது.

நாமும் இன்றையச் சூழ்நிலையிலும் இப்படித்தான் மக்களில் பெரும்பாலானோர் வசதிகள், அன்புறவுகள், மகிழ்ச்சி, பணம், பட்டம், பதவி கிடைத்தாலும் கடவுள் கொடுத்த அத்தனை நன்மைகளிலும் நிறைவடையாமல் வருந்துகின்றனர். எத்தனையோ நவீன முறைகளைக் கையாண்டும் குடிநீரில் எப்படியோ ஒரு கிருமி நுழைந்து விடுவதைப்போல, முழு நிறைவைத் தேடித்தேடி அலைகின்றனர். ஆனால், அங்கும் ஒரு அதிருப்தி நிலையே காத்திருக்கும். ஆகவே, இருக்கும் இடத்திலேயே கடவுள் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளை நினைத்து, அவற்றை உணர்ந்தவர்களாய் அவருக்கு நன்றியுடையவர்களாயும், நன்றிகூறப் பழகவும் வேண்டும். இதுவரை செய்த செயல்களுக்காக நன்றியோடு வாழ்வோம்.

மோ.தார்சீசியஸ்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சு.கம்ஷா
முகவரி : வரணி



பெயர் : த.மதிவாணன்
முகவரி : புதுக்குடியிருப்பு

வாழ்க வளமுடன்



# பதவியிலிருந்து இளைப்பாறினாலும் இசைப் பணிக்கு ஓய்வேயில்லை...

## தென்மராட்சியில் கர்நாடக இசையை வளர்க்கவும், வளமாக்கவும் தோற்றம் பெற்ற இசைக்கலைஞர் சௌந்தரவல்லி தருமலிங்கம் என்பவருடனான நேர்காணல்...

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கல்லூரியில் படிக்கும் காலத்தில் நவராத்திரி விழா போன்ற விழாக்காலங்களில் கல்லூரியில் நடத்தப்பெறும் இசைப் போட்டிகளில்



பங்குகொண்டு - பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றிருந்தேன். 'சங்கீத இரத்தினம்' என்னும் பட்டத்தை 1972 ஆம் ஆண்டிலேயே பெற்றேன். எனது அரங்கேற்றம் பக்கவாத்திய சகிதம் நாட்டின் பல பாகத்திலிருந்தும் வந்து கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் அவையில் தேவாரப் பாடல் பெற்றதும் 'தேன்பொந்து' என்று நாவலர் பெருமானால் போற்றப்பட்டதுமான அருள்மிகு கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரப் பெருமானின் சிவாலயத்தில் 1961 ஆம் ஆண்டு பங்குனி உத்தரத் திருவிழா நாளன்று இடம்பெற்றது.

1962ஆம் ஆண்டு இலங்கை வானொலியில் 17ஆவது வயதில் எனது முதலாவது இசைக்கச்சேரியை நிகழ்த்தினேன். அன்று தொடக்கம் 1982ஆம் ஆண்டு வரை இலங்கை வானொலியில் 'பி' தரக்கலைஞராக இசைக்கச்சேரிகளை நடத்தி வந்துள்ளேன். நாட்டு நிலைமை - போக்குவரத்து வசதி என்பன குன்றிவிடவே வானொலித் தொடர்பு நின்றுவிட்டது.

18.05.1977ஆம் திகதி தொடக்கம் 05.11.2005 ஆம் திகதி வரை நாட்டிலுள்ள பல பாடசாலைகளிலும், பளையில் இயங்கும் தொலைக்கல்வி பயிற்சி நிலையம் உட்பட, இசையாசிரியராகப் பணியாற்றியுள்ளேன். தேசியக் கல்லூரியும், உயர்நிலைக்கு என்னை ஏற்றி வைத்ததுமான சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மாத்திரம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணி செய்துள்ளேன்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இசையாசிரியராக நான் பதவியேற்கும் வரை மாணவிகளே சங்கீதம் அதிகளவில் கற்று வந்தார்கள். நான் பதவியேற்றதற்குப் பின்பு இந்த நிலைமையில் மெல்லமெல்ல மாற்றம் ஏற்படத்தொடங்கியது. மாணவிகளுடன் மாணவர்களும் போட்டியிட்டுக் கொண்டு சங்கீதம் கற்கத் தொடங்கினார்கள். க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்கும் கூட!

மேலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மேலைத்தேச வாத்தியமான பாண்ட் வாத்தியக்குழு அமைக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு, இன்று சிறந்ததொரு பாண்ட் வாத்தியக்குழுவாக விளங்குவதற்குக் காரணம் மாணவர்களின் ஒத்துழைப்பும் எனது தீவிர முயற்சியுமாகும். இவை சிலவே; இன்னும் பல!!

என்னிடம் மிக நீண்டகாலமாக இசை பயின்று வந்த மாணவர் மீசாலையைச் சேர்ந்த நாகலிங்கம் சுபாகரன். அவர் இப்போது தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் கர்நாடக இசையில் முதுகலைமாணிப் பட்டத்துக்கான (எம்.ஏ) கற்கைநெறியைப் பயின்று வருகின்றார்.

மாணவர்கள் வாயால் 'நான் இவரிடம் இசை பயின்றேன்' என்று கூறக் கேட்பதுவே கற்றவர்களுக்கும், கற்பித்தவருக்கும் மனநிறைவை, மனமகிழ்வைத் தருவதொன்றாகும்.

மேலும் என்னிடம் இசை பயின்று, இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்று வெளியேறிய எனது மாணவர்கள் பலர் இன்று இசையாசிரியராக அரச நியமனம் பெற்று நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனது பட்டப்படிப்புக்கு வயலினைத் துணைப்பாடமாக ஏற்றுக்கொண்டதால், வயலின் கையாளும் வித்தையைக் கற்றுக்கொண்டேன். ஆர்மோனியம், வீணை போன்றவற்றை எனது சுயமுயற்சியால் கற்றுக்கொண்டேன்.

நான் கொழும்பில் பணியாற்றிய பாடசாலையில் கற்பித்த சிங்கள இசை ஆசிரியை மேலைத்தேச வாத்தியத்தைக் கற்பிக்கும்போது, அதனை அவதானித்துக்கொண்டு, அதன் சுரவரிசைகளை அறிந்து, அவற்றுக்குச் சமமான கர்நாடக சுரவரிசைகளை ஆய்ந்தறிந்து கொண்டேன். அதன் பின்பு எனது சுயமுயற்சியில் மேலைத்தேச வாத்தியங்கள் ஒவ்வொன்றாகக் கையாள - இசைக்கக் கற்றுக்கொண்டேன். இறையருளும், சுயமுயற்சியும் தான் என் வளர்ச்சிக்குக் காரணம்!

எனக்கு அதிக விருப்பமான ராகம் ஆபேரி! இது ஒரு ரம்மியமான ராகம்! இதனை விஸ்தாரமாக ஆலாபனை செய்து பாடும் போது சுகம் - மனநிறைவு உருவாகிறது. ரசிகர்களும் மிகவும் விரும்பி ரசிக்கிறார்கள். எனது கச்சேரிகளில் ஆபேரிக்கு நிச்சயம் இடமுண்டு! எனது நினைவில் என்றென்றும் நிலைத்து நிற்பவர் எனது தந்தையாரான உமாமகேஸ்வரன். நான் இசைக்கல்வி கற்பதற்கு நான் விரும்பிய இசைவித்துவான்களிடம் எங்கிருந்தாலும் சரி - என்னை அழைத்துச் சென்றார். நான் படித்துவிட்டு வரும்வரை காத்துக்கொண்டு இருந்து கூட்டிக்கொண்டு வருவார்!!

இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு என்னை வளர்த்துக்கொள்ளுவதற்காக இசை நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அங்கெல்லாம் அழைத்துச்செல்வார். எனது இசை நிகழ்ச்சி எங்கு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் அங்கெல்லாம் அழைத்துச் சென்றார்.

ஒரு நாளேனும் தந்தையாரிடம் சிடுசிடுப்பையோ, கடுகடுப்பையோ, முணுமுணுப்பையோ கேட்டதில்லை. முகத்தினில் சலிப்பையோ, தளர்ச்சியையோ



### சிநேகிதியே

பார்த்ததில்லை.

எனது இன்றைய வளர்ச்சிக்கு - உயர்ச்சிக்கு எனது தந்தையாரே முழுமுதற் காரணம் என்றால், அது மிகையாகாது. எனது தந்தையாராக அவரைப் பெற்றது எனது தவப்பயனே!

அடுத்து எனது தந்தையாரின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக - தூண்டுகோலாக இருந்தவர் எனது அன்புத்தாயார் என்றால் அது முக்காலமும் உண்மை!

அடுத்து என் நன்றிக்குரியவர் எனது கணவர். சில கணவன்மார்களைப்போல 'சங்கீதமும் வேண்டாம், சம்பாத்தியமும் வேண்டாம், வீட்டில் இருந்து கொண்டு பிள்ளைகளையும் பெற்றுச் சமையலையும் கவனித்தால் போதும்' என்று என்னைத் தடைசெய்யாது எனது இசைப்பணியைத் தொடர அனுமதித்ததோடல்லாது, என்னிசைப் பயணத்தின் போது நிழல்போல என்னைத் தொடர்ந்து துணையாக வருகின்றதோடு நில்லாது, எனது இசைப்பணிக்கு உந்து சக்தியாக - ஊக்குவிக்கும் சக்தியாக விளங்கினார்.

கலையைக் கற்கும் வரை மட்டுமல்லாது, கற்றுயர்ந்து எந்த நிலையை எட்டினாலும், கலையைப் போதித்த குருவை மறக்கலாகாது. மதிக்கப் பழக வேண்டும். இன்றைய நாட்களில் பொதுவாகக் 'குருபக்தி' சற்று அருகியே காணப்படுகின்றமை நல்லதொன்றல்ல!

அடுத்து குருவிடம் கற்ற கலையை இடைவிடாப் பயிற்சியின் மூலம் வளப்படுத்தி-வசப்படுத்திக்கொள்ளவேண்டும். கலைப் பயிற்சியும் மாணவர்களிடையே இன்று குறைவுதான். இடைவிடாக் கலைப்பயிற்சியே வளர்ச்சி தரும்.

**வயலூர் முருகன்**

# மாதவிடாய் நிறுத்தம் லௌகீக வாழ்வின் முடிவல்ல



பெண் ஒருவருக்கு மாதவிடாய் நின்ற பின் பல விதமான உடல், உள ரீதியான அசௌகரியங்கள் ஏற்படுகிறது. இவை தொடர்பாக விளக்கத்தை பெறுவதன் மூலம் அந்த அசௌகரியங்களிலிருந்து தம்மை மீட்டுக் கொள்ள முடியும்.

மாதவிடாய் நிறுத்தம் பற்றி பார்ப்பதற்கு முன் சாதாரணமாய் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் மாதவிடாய் பற்றி பார்த்தால்,

மாதவிடாய் என்னும் போது பூப்படைந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் இந்த அனுபவம் தவிர்க்க முடியாததொன்றாகும். இதனை மாதவிலக்கு, சூதகம், மாதவிடாய், வீட்டுத் தூரம் எனப் பல விதமாக அழைப்பர்.

மாதவிடாய் சாதாரணமாக ஒரு பெண்ணுக்கு 45-55 வயதுக்கிடையில் நிரந்தரமாக நிறுத்தப்படுகிறது. இந்த வயதை அடையும் போது பெண்ணின் ஜனன உற்பத்தி உறுப்புக்களில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன.

அத்துடன், ஓமோன்கள் உண்டாவது, சூல் வெளியேறுதல் என்பன படிப்படியாக குறைவடைகிறது. இதன் விளைவாக மாதவிடாய் நிகழும் ஒழுங்கு மாற்றமடையலாம். அத்துடன், ஓமோன் குறைவடைவதால் மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம்.

மாதவிடாய் நிற்கும் காலங்களில் சில சமயங்கள் அதிகரித்த இரத்தப் போக்கு ஏற்படலாம். அல்லது நீண்ட நாட்களுக்கு இரத்தப் போக்கு நீடிக்கலாம்.

இவ்வாறான சூழலில் வைத்திய ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும்.

சிலருக்கு மாதவிடாய் நிற்கும் காலம் நெருங்கும் போதோ அல்லது அதன் பின்னரோ ஒரு மாற்றமும் தெரிவதில்லை. மாதவிடாய் என்னும் நிகழ்வு மட்டும் நிறுத்தப்படுகிறது.

அநேகமான பெண்களுக்கு ஓமோனின் அளவு குறைவதால், சில அசௌகரியங்களை உணர நேரிடுகிறது. அசௌகரியங்களை வெல்வது எப்படி என்பதை பார்ப்பதற்கு முன் மாதவிடாய் நிறுத்தத்தின் போது ஏற்படும் அசௌகரியங்களைப் பார்த்தால் இவை உடல் ரீதியானவையாகவும், உள ரீதியானவையாகவும் காணப்படுகின்றன.

**உளரீதியானவை** -

- ✳ பதற்றமடையும் தன்மை.
- ✳ மனதில் ஆறுதலின்மை.
- ✳ தூக்கமின்மை.
- ✳ எதிலும் கவனம் செலுத்த முடியாமை.
- ✳ மனத்தளர்ச்சி.
- ✳ இலகுவில் சின முறுதல்.
- ✳ நெருக்கீட்டுத் தாக்கங்கள்.



- ✳ சந்தேக உணர்வுகள் குறிப்பாக கணவன் மீது.
- ✳ வாழ்வு முடிந்து விட்ட உணர்வு.


**உடல் சார்ந்த அசௌகரியங்கள்** -

- ✠ அதிகமான களைப்பு, மூச்செறிதல்.
- ✠ உடல் நிறை அதிகரித்தல்.
- ✠ உடல் உஷ்ணமாக இருத்தல் அத்துடன் சிலருக்கு எரிவு இருப்பதாக உணருதல்.

(தொடரும்...)

**வெ.நாகநாதன், மருத்துவபீடம், 23 ஆம் அணி.**

# இல்லறம் நல்லறமாக



இன்று பல தம்பதிகள் திருமணத்தின் பின் மிகவும் இடர்பாடுகளுடனேயே வாழ்வைக் கழிக்கிறார்கள் . இது அதிகமாக நிகழ்கிறது. இளம் தம்பதிகளுக்குள்ளே இவ்வாறு இடர்பாடுகள் ஏற்படக்காரணம் வாழ்வில் ஏற்படும் விடைகாண முடியாத பிரச்சனைகளேயாகும். அவர்களுக்கிடையே காணப்படும் பலவீனம், தூரநோக்கோடு சிந்தித்துச் செயற்படாமை குறிப்பிட்ட ஒரு விடயத்தில் இருவரும் உடன்படாமை, புரிந்துணர்வின்மை, கடமையுணர்வு, பொறுப்புணர்வு என்பவற்றை உதாசீனப்படுத்தல், மாமி-மருமகள் பிரச்சனை, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான விரிசல், உறவினர்களினதும், நண்பர்களினதும் வற்புறுத்தல்கள், இன்னும் எதிர்வாதம் செய்தல், பிடிவாதம் பிடித்தல், புறம் சொல்லுதல், கேட்டல், பொறுமையின்மை, மற்றவர்களை எப்போதுமே தவறான எண்ணத்துடன் நோக்குதல் என்ற காரணங்களே இல்வாழ்வில் பிரச்சினைகள் தோன்ற அத்திவாரமாகின்றன.

மேற்கூறப்பட்ட ஏதாவது ஒரு விடயம் தம்பதியினருக்கு ஏற்பட்டால் அதுவே குடும்பவாழ்வின் விரிசலுக்கு அடியிடும். மனோதத்துவ அறிஞர்கள், எல்லோரின் மனதிலும் - முதியோரினதும், குழந்தைகளினதும், குணாதிசயங்கள் இருக்கவே செய்யும் என்கின்றனர்.

சிறுவயது முதல் நாம் பிறந்து வளர்ந்த சூழல், பழகிய மனிதர்கள் பற்றிய நினைவுகள் நமது மனதில் பதிந்தே இருக்கும். அதிகமாக, கடுமையாக நடந்து கொள்பவர்கள் வாழும் சூழலில் பிறந்து வளர்ந்த ஒருவர் பிரச்சினைகளின் போது பொறுமையின்றி செயற்படுவார். அவர் மற்றையவர்களின் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்கவும் மாட்டார். அதேபோல் மற்றவர்கள் ஆலோசனை வழங்க அனுமதிக்கவும் மாட்டார். இதனால் குடும்ப வாழ்வில் விரிசல்கள் ஏற்பட அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன.

சிறுவயது முதல் பெற்றோரின் அன்பைப் பெறாதவர்கள் எப்பொழுதும் நினைப்பது மற்றவர்களை நோகடிக்கவேண்டுமென்று, புதுமணத்தம்பதிகள் வாழ்வில் இதுவும் ஒரு பிரச்சினையை உருவாக்கிவிடும். சிறுவயதில் இருந்த குணாதிசயங்கள் பலருக்கு வெளிக்கொணரப்படுவது - அவர்கள் நல்லது எது? கெட்டது எது? எனப்பிரித்தறியும் போதே தான். அதாவது திருமண பந்தத்துள் நுழைந்தபின்பேதான். இது இல்வாழ்வின் விரிசலுக்கு மற்றுமொரு காரணியாகும்.

இவ்வாறு பலதரப்பட்ட பிரச்சனைகள் திருமணத்தின் பின் தம்பதிகள் வாழ்வில் ஏற்பட்டால் அவ்வாறான பிரச்சினைகளைச் சாதாரண மனிதர்கள் என்ற நிலையில் நின்று நோக்க வேண்டும். அப்போது தான் பிரச்சினையின் சுயஉருவம் தென்படும். இல்லறம் வெற்றி பெறும்.

# நிகழ்வின் நிழல்கள்...



உலக வங்கியின் வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனரமைப்பு நிர்மாணத் திட்டத்தின் அனுசரணையுடன் - சங்கானை அரசினர் இயந்திர மட்கல நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மேசன் பயிற்சிநெறிக்கான ஆரம்ப விழாவில் கலந்து கொண்ட இந்தத் திட்டத்தின் யாழ்.மாவட்ட பொறியியலாளர் கா.வயிரவநாதனை - மட்கல நிலையப் போதனாசிரியர் கே.தவராசா மாலையணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம். (48)




நெடுந்தீவு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில் பிரதம விருந்தினர் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் மற்றும் நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரத்தினம் ஆகியோரை வித்தியாலய அதிபர், போட்டிச் செயலாளர் ஆகியோர் மைதானத்துக்கு பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். (113)



நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய ஏற்பாட்டில் சர்வோதய நிறுவனத்தினரால் சிறுவர்களுக்குப் போஷாக்குணவு வழங்கப்பட்ட நிகழ்வில் - சர்வோதய இணைப்பாளர் இ.சிவசுப்பிரமணியம் தாய் ஒருவருக்கு போஷாக்குணவுப் பொதி வழங்குவதைப் படத்தில் காணலாம். (31)



யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் - றீடோ நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஒவ்வொரு மாணவருக்குமான கல்வித்திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரை நிகழ்த்துவதையும், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய அதிபர் சி.சுதந்திரன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், றீடோ இணைப்பாளர் ஜெயக்குமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



கோப்பாய் கோட்டமட்டத்தில் நடத்தப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவில் அதிபர் தரத்தைச் சேர்ந்த - அ.சபாநாயகம், ந.சண்முகரத்தினம், பெ.பேரின்பநாதன், எஸ்.விஸ்வலிங்கம், செல்வி.ந.செல்வாம்பிகை ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் பங்கேற்ற கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்களையும் படத்தில் காணலாம். (90)

# மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனமொன்று நெடுந்தீவில் உருவாக்கப்பட வேண்டும்!

## கே.என்.எச்.இணைப்பதிகாரி மித்திரரஞ்சன்

நெடுந்தீவு—

நெடுந்தீவுக்கென மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டாலே நெடுந்தீவு மக்களது தேவைகள் நிறைவேற்றப்பட்டு, அதன் முன்னேற்றத்தையும் காணமுடியும். எத்தனையோ அரச சார்பற்ற நிறுவனங்கள் சேவையாற்றும் போதும் நீண்ட தூரம் பெரு நிலப்பரப்பு என்ற காரணங்களால் இந்தப் பகுதிக்கான தேவைகளை நிறைவேற்றமுடியாது போகிறது என கே.என்.எச். நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பதிகாரி எஸ்.மித்திரரஞ்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை பகற் பராமரிப்பு நிலையத்தின் வெள்ளிவிழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - ஜேர்மனியின் கே.என்.எச் நிறுவனமானது - நெடுந்தீவு பகற்பராமரிப்பு நிலையத்தின் வெள்ளிவிழா நிகழ்வையொட்டி, பெரு மகிழ்வடைவதுடன் - அதன் சேவைகள், நோக்கங்கள் நிறைவேறும் காலமும் கைசேர்ந்துள்ளது. கே.என்.எச். நிறுவனம் நெடுந்தீவில் கால் வைத்து தனது பணியைச் செய்யத் தொடங்கியதிலிருந்து, பராமரிப்பு நிலைய செயற்பாடு திருச்சபையுடன் மட்டும் நின்றுவிடாது மக்கள் மயமாக்கப்பட வேண்டும் என மாறிமாறி வந்த குருமார்களுக்கு ஆலோசனை வழங்கிய போதும், திருச்சபையூடாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமானால், சிலருடன் மட்டுமே கலந்தாலோசித்து செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

ஆனால், தற்போது போதகர் யோன் செல்வம் அந்தத் தடைகளை எல்லாம் மீறி, மக்கள் மயமாக்கல் திட்டம் தற்போது வித்திடப்பட்டுள்ளது. அதன்படியே பெற்றோர் சங்கம், பழைய மாணவர்கள் சங்கம் என்பன உருவாக்கப்பட்டு, கே.என்.எச் நிறுவனத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இருப்பினும் நெடுந்தீவை முன்னேற்ற இங்கு மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ள ஒரு அமைப்பு இன்மையால், இங்கு வந்து பணியாற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள் நிரந்தரமாகத் தங்கி நின்று சேவையாற்ற இயலாத நிலையில் பின்னிற்கும் நிலையுள்ளது.

இந்த நிலையைப் போக்க வேண்டும். இவர்களது மனப்பாங்கு சேவையைவிட, தாம் திட்டமிட்டு பெற்ற பணத்தை எப்படியாவது செலவழித்துவிட வேண்டும் என்றே இருக்கும். இதனை நான் எனது 23 வருடங்களாக அரசசார்பற்ற நிறுவனத்துடனுள்ள தொடர்பால் கூறுகிறேன்.

எனவே, நெடுந்தீவுக்கென ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தை நிறுவுவதற்கே நான் முயற்சியெடுத்து வருகிறேன். அதனை உருவாக்கி, அரசில் பதிவு செய்து கொள்வதன் மூலம் நெடுந்தீவுக்கான முன்னேற்றத்தை இங்குள்ள மூல வளங்களை வைத்துக் கொண்டே மேற் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எனவே, நெடுந்தீவுக்கென ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தை அமைத்து அதனூடாக தீவினது முன்னேற்றத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (113)

# பங்குனித்திங்கள் உற்சவம்

உடுவில் —

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பங்குனி திங்கள் உற்சவம் ஏப்ரல் 10 ஆம் திகதி சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பொங்கல், குளிர்த்தி என்பன இடம்பெற்று அம்பாள் திருவீதி உலா இடம் பெறும் என ஆலய பூசகர் அ.துரைச்சாமி ஐயர் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள், சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் ஆலயத்துக்குச் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். (101)

# பதியப்படாத பிறப்புகளை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம் —

"பிறப்புக்களை பதிவு செய்து மனிதனுக்கு மதிப்பளியுங்கள்" எனும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக சிறுவர்களின் பிறப்பைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை பதிவு செய்யப்படாத சிறுவர்கள், பாடசாலை மாணவர்களின் பிறப்பை பதிவு செய்யும் வகையில் துரித செயற்திட்டமொன்று வட வலய உதவிப்பதிவாளர் நாயகத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய இதுவரை தங்கள் பிறப்பு பதிவு செய்யப்படவில்லை எனக் கருதும் மாணவர்களும், தமது பிள்ளையின் பிறப்பைப் பதியவில்லையெனக் கருதும் பெற்றோர்களும், தமது பாடசாலையில் கற்கும் மாணவர்களின் பிறப்பு பதியப்படவில்லையெனக் கருதும் அதிபர், ஆசிரியர்களும், பதியப்படாத பிள்ளையின் பெயர், தந்தையின் பெயர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி என்பவற்றை எமக்கு தபாலட்டை ஒன்றின் மூலம் உதவிப்பதிவாளர் நாயகம், வடக்கு வலயம், காணிப்பதிவுக்கட்ட டம் 3 ஆம் மாடி, யாழ்ப்பாணம் எனத் தெரியத்தரவும்.

இதன்மூலம் அவரது பிறப்பைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். இந்த விபரங்களை பொதுநல மன்றங்களோ, நலன்விரும்பிகளோகூட எமக்கு அனுப்பிவைக்கலாம் என வட வலய உதவிப்பதிவாளர் கேட்டுள்ளார்.

# அனைத்துலக பெண்கள் தினமும் பிள்ளைகள் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் அனைத்துலகப் பெண்கள் தினமும், 2005 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் சித்தியடைந்த சி.க.கூ.சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாச மகளிர் குழுத்தலைவி இ.இராசமணி தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் மாவட்ட நீதிபதி த.விக்கினராஜா முதன்மை விருந்தினராகவும், யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மகளிர் குழுத் தலைவி ரதி சோதிலிங்கம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் க.பொன்னம்பலம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், தெங்கு பனம் பொருள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஐயாத்துரை, கணக்காய்வு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.கந்தசாமி, மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில்- யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுற வுச்சங்கங்களின் சமாச நெறியாளர் குழு உறுப்பினர்கள், சமாசப் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாரம்பரிய போட்டிகளுக்கு ஏற்பாடு

உடுவில்—

எதிர்வரும் சித்திரைப் புது வருடப்பிறப்பையொட்டி வலி.வடக்கு பிரதேச செயலகம் பாரம்பரிய போட்டிகளை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

தயிர் முட்டி உடைத்தல்,போர்த் தேங்காய் உடைத்தல், பலம் அறிதல் (பொல்லு இழுத்தல்), கை கொடி சவாரி போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் இந்தப் பிரதேசத்துக்குட்பட்ட மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களூடாகவும், ஏனையோர் தமது பிரிவு கிராம அலுவலர்களினூடாகவும் விண்ணப்பங்களை பிரதேச செயலக கலாசார பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு, கலாசார உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (101)

# கல்விக்கான உணவு செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம் —

கோப்பாய், தெல்லிப்பளை, சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, வேலணை,நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய கோட்டப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விக்கான உணவு செயற்திட்டம் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல் ஒன்று - நாளை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்வித் திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் - உலக உணவுத் திட்ட அதிகாரிகளும், மாவட்ட செயலக அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் - வலயக் கல்விக்கான உணவு செயற்திட்ட இணைப்பாளர்கள், உரிய கோட்டக் கல்வி அலுவலர்களின் கோட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலயக் கணக்காளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ரி)

# காசநோய் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்—

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மார்புநோய் சிகிச்சை நிலையத்தால் நடத்தப்படவுள்ள ஓவியம், கட்டுரைப்போட்டிகளுக்கு மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் "காசநோய்வராது தடுப்போம்" எனும் தலைப்பிலும், உயர்தர மாணவர்கள் "காச நோயின் சமூக வடுவை அகற்றுவோம்" எனும் தலைப்பிலும் கட்டுரைகளை எழுதலாம்.

வரையப்படும் ஓவியங்களையும், கட்டுரைகளையும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் "மார்புநோய் சிகிச்சை நிலையம்" பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# வீடமைப்புத் திட்டம் குறித்து ஆராய செஞ்சிலுவைச் சங்கக்குழு வருகிறது!

வடமராட்சி கிழக்கு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் செஞ்சிலுவைச் சங்கங்களை மேற்கொள்ளப்பட்டுவரும் நிரந்தர வீடமைப்புத் திட்டங்களைப் பார்வையிடவும். நிரந்தர வீடமைப்புத் திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்படாமல் இருந்தால் அதற்கான காரணங்களைக் கண்டறியவும் செஞ்சிலுவைச் சங்கங்களின் உயர் மட்டக்குழுவொன்று யாழ்ப்பாணம் , முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளது.

இந்தக் குழுவில் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்க சுனாமி புனரமைப்பு சிரேஷ்ட பணிப்பாளர் வில்லியம் அண்டர்சன், கனடா செஞ்சிலுவைச் சங்க பிரதி செயலாளர் நாயகம் சான்ஸ் மொல்பிறில், அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்க பிரதி செயலாளர் நாயகம் ஹெலிஸ் பொண்ட் வேணர், செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனங்களின் ஆலோசகர் கொஸ்ரன்ரா வடிநொல்சி, பிரதித் தலைமைப் பிரதிநிதி அல்பிறட் ஜோன் பெனிக்கோ, செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தேசிய தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரதிப் பணிப்பாளர் நாயகம் சுரேன் பீரிஸ், திட்ட அலுவலர் (கட்டடம்) நிசந்த விக்கிரமசிங்க, நிறைவேற்றுப் பணிப்பாளர் ரீ.சித்திரவேல் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் இவர்கள் அன்று மாலை வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம், மாமுனை, செம்பியன்பற்று தெற்கு, தாளையடி, மருதங்கேணி தெற்கு கிராமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிடுவர்.

அத்துடன், இதுவரை நிரந்தர வீடுகள் அமைக்கப்படாவிடின் அதற்கான காரணங்களைக் கண்டறிவதுடன், நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ள கிராமங்கள், வீடுகளைப் பெறும் பயனாளிகள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமை காலை கிளிநொச்சிக்கும், அன்று மாலை முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் சென்று அங்கு செஞ்சிலுவைச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் நிரந்தர வீடமைப்புப் பணிகளையும் இவர்கள் பார்வையிடவுள்ளனர். (21)

## தமிழில் பெயர் மாற்றம்

பளை

பளைப் பிரதேச நிதித்துறை தமிழ் மொழி காப்புத் திட்டக் குழுவின் வருவாய்ப் பகுதியினரால் அரசர்கேணி, தர்மக்கேணி, முகாவில், சேரன்பற்று, வண்ணாங்கேணி, ஊர்வணிகன்பற்று, அறத்திநகர் போன்ற பிரதேச மக்கள் பிறமொழியிலுள்ள பெயர்களை தமிழில் மாற்றம் செய்து வருகின்றனர்.

இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து பல கிராம மக்கள் 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் பெயர்களை தமிழில் மாற்றம் செய்வதற்கு முன் வந்துள்ளனர்.







வவுனியா -இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தி நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள் ஒளியேற்றி பிரார்த்தனை செய்வதையும். பிரதம விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படம் -கனகரவி

## வவுனியா- கந்தசாமி நகர்ப்பகுதியில் சுகாதாரம் தொடர்பான கருத்தரங்கு

வவுனியா

வவுன்ரியா-கந்தசாமி நகர்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கருத்தரங்கு வவுனியா- செட்டிக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து நடத்தப்பட்டது.

போர் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்கள் போரூட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த ஆண்டு மீளக் குடியமர்த்தப்பட்டனர். தற்போது குறிப்பிட்ட குடியேற்றத் திட்டத்தில் 54 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கு அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தியைத் தடுக்கும் நோக்குடனேயே இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (பூ)

## இயக்கச்சி அ. த. க. பாடசாலையில் பெண்கள் விழிப்புணர்வு நிகழ்வுகள்

பளை

டெனீஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் பெண்கள் விழிப்புணர்வு கலை நிகழ்வுகள் நேற்று முன்தினம் பி.ப 4.00 மணிக்கு நடைபெற்றது.

இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் இராஜரட்ணம் இராசம்மா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் - பொதுச் சுடரை டெனீஸ் அகதிகள் பேரவை பிரதிநிதி ஸ்டெபான் அறிவழகன், பளை கல்வி அதிகாரி இ.இராஜரட்ணம் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றி வைத்தார்.

மங்கள விளக்கை இயக்கச்சி கிராம அலுவலர் பிரதாபராஜ், பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் அ.அருளானந்தம், யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், ஊரக மேம்பாட்டுத்தலைவர் தேவகுருநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை மாவீரர் ஒருவரின் சகோதரி ஏற்றிவைத்தார். மலர் மாலையை இராசநாயகி அணிவித்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து பெண்கள் எழுச்சி தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூவிழி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை புனர்வாழ்வுக்கழக செயலாளர் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் இறுதியில் பளைக் கோட்ட ஆசிரியர்களின் பட்டிமன்றம் நடைபெற்றது. பெண்கள் அடக்கு முறை சம்பந்தமாக புதியவள் என்னும் நாடகம் சங்கநாத கலைஞர்களால் நடத்தப்பட்டது. இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் விடுதலை சிறகுகள் எனும் நாடகமும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அலுவலர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பளைப்பிரதேச அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் சந்தனா, பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## புதுக்குடியிருப்பு தொழில்நுட்பக்கல்லூரியில் ஆங்கிலக் கற்கைநெறி ஆரம்பம்

புதுக்குடியிருப்பு

தமிழீழ இளையோர் மேம்பாட்டு அமைப்பின் முல்லைத்தீவு மாவட்டத் தின் புதுக்குடியிருப்புத் தொழில்நுட்பக்கல்வி நிலையத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைமன்ற உதவியுடன் ஆங்கிலக் கற்கைநெறி கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

மாலை 4 மணியளவில் புதுக்குடியிருப்புக் கல்வி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் இளங்கோ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ இளையோர் மேம்பாட்டு அமைப் புப் பொறுப்பாளர் சோ.நரேஸ் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட இளையோர் சேவை மன்றப் பொறுப்பதிகாரி சண்முகவடிவேல், ஆங்கில ஆசிரியர் இராசதுரை தமிழீழ இளையோர் மேம்பாட்டு அமைப்புப் பொறுப்பாளர் சோ.நரேஸ் ஆகியோர் நிகழ்த்தினர். (பூ)

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

முல்லைத்தீவு

முல்லைத்தீவு நகர் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்படும் நிலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கட்டாக்காலி நாய்கள் இந்தப் பகுதியில் அலைந்து திரிவதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவது மட்டுமன்றி அவை வர்த்தக நிலையங்கள், வீடுகளில் புகுந்து தொல்லை கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு இந்தப் பகுதிகளில் நாய்க்கடிக்குள்ளாவோர் தொகை அதிகரித்து வருவதால், இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர் (பூ)

## கற்றல் உபகரணம் வழங்கல்

கிளிநொச்சி

கிளிநொச்சி - கரைச்சிப் பிரதேசத்துக்குட்பட்ட தாய் தந்தையரை இழந்த 50 சிறார்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த உபகரணங்களை கரைச்சிப் பிரதேச செயலர் சு.சுலோஜினி வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வு சிறுவர் உரிமை மேம்பாட்டு நிறுவன உத்தியோகத்தர் மா.பத்மராஜின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

உபகரணங்கள் கரைச்சிப் பிரதேச செயலகத்தின் சிறுவர் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (09)

## கரைச்சி பிரதேச செயலகத்தில் தட்டெழுத்தாளர்கள் இல்லை!

வட்டக்கச்சி

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாது சிரமப்படுகின்றனர். இந்தப் பிரதேசத்தில் கணினி வசதி இல்லை எனக்கூறி கடமைகளை நிறைவேற்ற உத்தியோகத்தர்கள் பின்னடிக்கின்றார்கள்.

இதனால் மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தூர இடங்களிலிருந்து வந்த மக்கள் தமது தேவை நிறைவேற்ற முடியாது ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அலைய வேண்டி இருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலும் இந்தச் செயலகத்தில் ஏற்கனவே தட்டெழுத்தாளர்களாக பதவி வகித்தவர்கள் அரசின் சுற்று நிருபப்படி முகாமைத்துவச் சேவைக்காக உள்வாங்கப்பட்டதால் தட்டெழுத்தாளர் பிரிவு வெற்றிடமாக உள்ளது. இதனால் அவசர கடிதங்களை அச்சிடவோ, அரச கடமைகளை நிறைவேற்றவோ முடியாத நிலையில் அரச ஊழியர்களும், மக்களும் சிரமப் படுகின்றார்கள்.

எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து தமது தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டியதும் அவர்களின் பொறுப்பே என மக்கள் தெரிவித்தனர். (09)

## பொலிஸார் வசமுள்ள தபாலகம்; மீளப் பெறுமாறு கோரிக்கை!

மன்னார்

மன்னார் - முருங்கன் பிரதேச தபாலகம் பொலிஸாரின் முழுமையான பாவனையில் உள்ளதால், இந்தத் தபாலகம் தற்காலிக கொட்டகையில் நிரந்தரக் கட்டடவசதியின்றி இயங்கி வருகின்றது.

இரண்டு மாடிகளைக் கொண்ட வசதிகளுடன் கூடிய இந்தத் தபாலகம் 1990 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது பொலிஸார் ஆக்கிரமிப்பில் உள்ளதால், கொட்டகையில் இயங்கி வருகின்றது.

அத்துடன் இந்த தபாலகத்தில் மழை காலத்தில் தபால் பொதிகளைப் பாதுகாத்துக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் போதியளவு இட வசதிகள் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. இது குறித்து அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பொலிஸாரின் வசமுள்ள முருங்கன் பிரதேச தபாலகத்தின் நிரந்தர கட்டடத்தை அவர்களிடமிருந்து மீளப்பெற்று, இயங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பிரதேச மக்கள் வடபகுதிக்கான அஞ்சல்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (பூ)

## நிரந்தரவீடுகள் அமைக்கும் பணி தாமதம்

முல்லைதீவு

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மணற்குடியிருப்பு மக்களுக்கு "கெயர்" நிறுவனம் 291 நிரந்த வீடுகளை அமைத்துத் தருவதாக தெரிவித்தது.

இந்த நிறுவனத்தால் இதுவரையில் வீடுகள் எதுவும் அமைக்கப்படவில்லை. இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர். இந்த நிலையில் இந்த நிறுவனத்தால் நிரந்த வீடுகளை அமைக்கும் பணியை விரைவாக ஆரம்பித்துக் கையளிக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். (பூ)

## அன்னை பூபதியின் நினைவுநாள் அனுஷ்டிப்பு

முல்லைதீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு விழா பிரதேச ரீதியாக எழுச்சியுடன் இடம்பெற்று வருகின்றது.

இதன் ஆரம்ப நிகழ்வாக புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் வணிகர் கழகத் தலைவர் பெ.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல இடங்களில் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றது. இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர் (வெ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.
- திருக்குறள்

## நமது நோக்கு

# துண்டாடச் சதி!

வடக்கையும் - கிழக்கையும் தனித்தனியே பிரிப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் பெரும் முனைப்புக் காட்ட ஆரம்பித்துள்ளன.

இத்தகைய முயற்சிகளின் ஒரு கட்டம்தான் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கையும் - கிழக்கையும் தனித்தனியே பிரிப்பதற்காக தெற்கில் அமைக்கப்பட்டிருக்கும் கூட்டமைப்பாகும்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்தான் இதுவரை இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்தது. இந்த இயக்கம் தனது குரலை வலுப்படுத்திக்கொள்வதற்காக சில பேரினவாதக் கட்சிகளுடனும், தீய சக்திகளுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளது.

இதற்கு - 'கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டணி' என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. இதில் அங்கம் வகிப்போர் யார் யார் என்று பார்த்தால் - ஜே.வி.பி, சுதந்திரக் கட்சி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆகிய பேரினவாத சக்திகளுடன் இணைந்திருப்பது - ஈ.பி.டி.பியிலிருந்து பிரிந்த விக்னேஸ்வரன், கருணா குழு மற்றும் அதாவுல்லா ஆகியோராவார்.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் வடக்கு - கிழக்கு இணைப்பை நீண்டகாலமாக எதிர்த்து வருகின்றமை வெளிப்படை. ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் மூலம் ஏற்பட்ட இந்த இணக்கப்பாட்டுக்கு எதிராக சுதந்திரக் கட்சி பெரும் போராட்டங்களை நடத்தியது.

ஜே.வி.பியும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தே வந்தது. ஆனால், இன்று ஆட்சியில் இருக்கும் இந்த இரண்டு கட்சிகளும் சேர்ந்து வடக்கையும் - கிழக்கையும் தனித்தனியே பிரிக்க நடவடிக்கை எடுக்காமல் இருந்துகொண்டு - இப்படிப்பட்ட கூட்டணிகளை உருவாக்கி இனவாதத்தையும், கலவரத்தையும் தூண்ட முயற்சிக்கின்றன.

தமிழ் மக்களுக்கு எதிராக எதையெதையெல்லாம் செய்ய முடியுமோ அதையதையெல்லாம் இந்தச் சக்திகள் செய்து வருகின்றன. அதுமட்டுமன்றி - சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இந்தமுறை தமது கபடத்தனமான நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்க தமிழ்த் தேசிய விரோத சக்திகளையும், அவர்களுக்கு துணைபோகும் அதாவுல்லா போன்றவர்களையும் கூட்டுச் சேர்த்திருக்கின்றனர்.

கிழக்கில் ஜிகாத் போன்ற ஆயுதக் குழுக்களின் உருவாக்கத்தின் பின்னணியிலும், கருணா குழுவின் செயற்பாடுகளுக்குப் பின்னாலும் அதாவுல்லா இருப்பதான குற்றச்சாட்டுக்கள் நிறையவே உள்ளன.

அதேவேளை, கிழக்கு மக்கள் நசுக்கப்படுவதாக ஒரு புதிய கற்பனையை கட்டவிழ்த்து விட்டிருக்கும் தேசப்பற்று தேசிய இயக்கத்துடன், கருணா குழவுடன் - விக்னேஸ்வரனின் கட்சியும் இணைந்துகொண்டிருப்பது விந்தைதான். இவர்கள் அனைவரும் வடக்கு-கிழக்கைப் பிரிக்கக்கூடாது என்று வலியுறுத்தி வந்த சக்திகள்.

ஆனால், கால ஓட்டத்தில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளிடம் இவர்கள் விலை போயிருப்பதனை உணரமுடிகிறது.

வடக்கையும் - கிழக்கையும் பிரிப்பதற்கு தமிழ்த் தேசிய விரோத சக்திகளைப் பயன்படுத்தி, சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளை வலுப்படுத்தவே முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

ஒருபுறத்தில் உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு - கிழக்கில் ரத்துச் செய்த அரசு - அம்பாறையிலும், திருகோணமலையிலும் இந்த ஒத்திவைப்பை மேற்கொள்ளவில்லை. இவ்விரண்டும் சிங்கள மாவட்டங்கள் போன்ற கருத்தை உருவாக்கும் முயற்சிதான் இது.

இந்த நிலையில், வடக்கையும் - கிழக்கையும் பிரித்துவிட்டால் தமிழர்களின் தாயகக் கோட்பாட்டைச் சிதைத்துவிடலாம் என்ற கனவு சிங்கள பௌத்த பேரினவாதத்திடம் நீண்டகாலமாகவே உள்ளது.


ஒன்றுபட்ட தமிழர் தாயகப்பிரதேசம் அவர்களை அச்சுறுத்தி வருவதால் - புவியியல் எல்லைகளை வரையறுத்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. இந்தக் குடியேற்றங் களின் ஊடாக தமிழர் தாயகத்தை பிரிக்கும் சதியை நிறைவேற்ற முடியாத கட்டத்தில்தான் இப்போது புதிய கூட்டணி அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டணி எதிர்காலத்தில் பெரும் பிரயத்தனங்களை எடுத்து தமிழர் தாயகத்தை துண்டாட முயற்சிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால், ஒன்றுபட்ட தாயகமும், மக்களும், தலைமையும் இவர்களால் சகிக்கமுடியாத ஒன்று.

எனவே, இதற்கு எதிராக சதிகள் அரங்கேறும். இனக்கலவரங்கள் தூண்டிவிடப்படக்கூடும். இத்தகைய சூழலில் தமிழர் தாயகப்பகுதி மக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் இந்தச் சக்திகளை எதிர்கொள்வது அவசியமாகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும்

## கிள்ளிவிடும் மகிந்த சிந்தனை அமைச்சர்கள்

"தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி விடுவது போல" என்று தமிழில் ஒரு ப்ழமொழி இருக்கிறது. மகிந்த சிந்தனை அரசின் சில செயற்பாடுகள் இந்தப் பழமொழியை நிரூபிப்பது போல தோன்றுகிறது என்று சொல்லிக்கொண்டே வந்தார் நண்பர் பரதேசியார்.

பல இடங்களுக்கும் சென்று பலரையும் சந்தித்து அனுபவம் நிரம்பிய பரதேசியார் காரணமில்லாமல் எதையும் சொல்ல மாட்டார். என்ன பழமொழியோடு வருகிறீர், என்ன விஷயம் என்று கேட்டேன்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சுமுகமான அமைதித் தீர்வு காண்பதற்கு அனுசரணையாளராகப் பணியாற்றும்படி நோர்வேயை முதலில் கேட்டுக்கொண்டது சந்திரிகா அம்மையாரின் சிறிலங்கா அரசுதான்.

இதற்கு விடுதலைப் புலிகளும் சம்மதம் தெரிவித்திருந்தனர். நோர்வேயின் அனுசரணையை தென்னிலங்கையின் இனவாதக் கட்சிகள் எதிர்த்தன.

இன்றைய மகிந்த அரசின் பிரதம மந்திரியும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூட தேர்தல் பிரசாரக் கூட்டமென்றில் நோர்வேயின் அனுசரணைப்பங்கு முடிந்துவிட்டதென்றும் நோர்வே மூலம் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் முடிந்துவிட்டதென்றும் கூட பேசியிருந்தார்.

## ஊர்சுற்றியார் எழுதுவது

தேர்தல் முடிந்ததும் சந்திரிகா அரசின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஒஸ்லோவுக்கு நேரில் சென்று தொடர்ந்து நோர்வேயை அனுசரணையாளராகச் செயற்படும்படி கெஞ்சிக் கேட்டு சம்மதிக்க வைத்தார்.

இன்றும் இனவாதக்கட்சிகள் நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், கண்டனங்களும் தெரிவித்து வருகின்றன. மகிந்த அரசுக்கு முட்டுக்கொடுக்கும் கட்சிகளும் நோர்வேயை கண்டித்து வருகின்றன.

நோர்வேயை அனுசரணையிலிருந்து அகற்றி விட்டு இந்தியாவை அல்லது வேறு நாடுகளைக் கொண்டு வரவேண்டுமென்று இவை வற்புறுத்துகின்றன. இந்தியா சம்மதிக்கவில்லை. வேறு நாடுகளும் இதற்குத் தயாராகவில்லை.

இந்தச் சமயத்தில் நோர்வே இருதரப்புக்குமிடையில் அனுசரணைப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்பதில் அரசாங்கம் உறுதியுடனிருப்பதாக மகிந்த அரசின் அமைச்சரும் ஜெனிவாப் பேச்சில் கலந்து கொண்டவருமான நிமால் சிறிபால டி சில்வா அறிவித்திருக்கிறார்.

நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யவும், கோஷங்கள் எழுப்பவும் ஜனநாயக நாட்டில் எவருக்கும் உரிமை உண்டு என்றும் அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

இதே சமயம் ஜெனிவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளை நோர்வேக்கு அழைத்தது குறித்தும், அங்கு வரவேற்றுப் பேசியது குறித்தும் இலங்கை அரசு தனது அதிருப்தியை நோர்வே அரசுக்கு அதன் தூதுவர் மூலம் இரண் டாவது தடவையாகவும் தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஜெனிவாப் பேச்சுக்களில் அரச குழுவில் கலந்து கொண்ட அமைச்சர் ரோகித போகொல்லகம நேற்றுமுன்தினம் நண்பகல் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரஸ்கரைச் சந்தித்து இலங்கை அரசின் அதிருப்தியைத் தெரிவித்தாராம்.

வேறு சிலநாடுகளின் பிரச்சினைகளிலும், அனுசரணையாளராகப் பங்குபற்றும் நோர்வே பல தரப்பினரையும் தமது நாட்டுக்கு அழைத்து வரவேற்றும் பேசுவது வழக்கம். இதை இலங்கையிலுள்ள நோர்வேத் தூதுவரும் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் என்றாலே பிசாசைக் கண்ட மாதிரி வெருளும் சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மகிந்த ராஜபக்ஷவின் அரசு நோர்வேக்கு அதிருப்தி தெரிவித்து, அதே சமயம் நோர்வே தொடர்ந்து அனுசரணையாளராக இருக்கும்படி கேட்பது என்ன ராஜதந்திரமோ? தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுவதா? என்று பரதேசியார் விளக்கமாகச் சொன்னார்.

## வேண்டாப் பொண்டாட்டியின் கைபட்டாலும்....!

"வேண்டாப பொண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்" ஒன்றும் இன்னொரு பழமொழி உண்டு. இதைப் போலத்தான் உங்களால் பாதுகாப்பளிக்க முடியாது என்பதற்காக நாங்களும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக அரசாங்கத்தினதும் அதன் படைகளினதும் கட்டுப்பாட்டில் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகளாக இருக்கும் யாழ்ப்பாணப் பகுதிக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் அரசியல் பணிபுரிய வருவதற்கு முன் வந்தனர்.

இதற்கு படைத்தரப்பில் வேண்டாப் பொண்டாட்டிக்கு விதிக்கும் நிபந்தனைகள் போல பல நிபந்தனைகள் விதித்துள்ளனர். உரிமையுள்ள பொண்டாட்டி எந்த நிபந்தனைகளையும் ஏற்க மாட்டாள் என்பதுபோல சொந் தப் பூமியில் நிபந்தனை விதிப் பது யார் என்று புலிகள் கேட்ப தில் நியாயமுண்டு என்று சொன் னார் பரதேசியார்.

முன்பு புலிகள் வெளியேறி மீண்டும் யாழ்ப்பாணப் பகுதிக்கு வராமல் நின்ற சமயம் யாழ்ப்பாணத்தில் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. திரும்பி வாருங்கள் என்று படையினர் அழைத்தனர். அந்தச் சமயம் யாழ்ப்பாணம் வந்த புலிகளை "விடுதலை வீரர்களே!, வீர வேங்கைகளே வருக! வருக!" எனப் பொதுமக்கள் கைகளில் புலிக் கொடி ஏந்தி யாழ்ப்பாணத்துக்குள்ளேயிருந்து வெளியே வந்து புலி வீரர்களை வரவேற்று அழைத்துச் சென்றதை இன்று படையினர் மறந்து விட்டார்களா? மாணவர்களும், மக்களும் புலிக் கொடி ஏற்றுவதை ஏன் தடைசெய்யவேண்டும்?

1971ஆம் ஆண்டிலும், 1989ஆம் ஆண்டிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிப் பீடத்திலிருந்த ஜனநாயக முறையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களை ஆயுதக் கிளர்ச்சிகள் மூலம் சட்டவிரோதமாகக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்து தோல்வி கண்ட இயக்கம் இன்றைய "தேச" பக்தர்களான ஜே.வி.பி என்ற விடுதலை முன்னணியினர் இவர்கள் முன்பு ஏந்திய ஆயுதங் களை இன்னமும் அரசிடம் ஒப்படைக்கவில்லை. சட்டவிரோத மாகவே இன்னமும் அவர்களிடம் ஆயுதங்களிருக்கின்றன. அவர்களுடைய ஆயுதங்களை ஒப்படைக்கும்படி இப்பொழுது யாரும் கேட்கவில்லை. அவர்களுடைய கட்சிக் கொடிகளை எங்கேயும் ஏற்றக்கூடாதென்று யாரும் தடைவிதிக்கவில்லை.

1958 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரை சிங்களக்காடையர்களாலும் 1977 தொடக்கம் இன்று வரையும் ஆயுதப்படைகளாலும் தமிழ் மக்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படுவதைத் தடுப்பதற்காகக் கையில் எடுத்த ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமென்று நிபந்தனை போடுவது எப்படி நியாயம்?

விடுதலைப் புலிகளும் மக்கள் முன்னணி என்ற பெயரில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதால் அவர்களின் கட்சிக் கொடிகளை ஏற்றுவதற்கும் உரித்திருக்கிறது. கொடிகளை ஏற்றக்கூடாது என்று தடைவிதிப்பது என்ன நியாயம்?

நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஜனநாயக உரிமை இருக்கிறதென்றால் அரசின் ஜனநாயக விரோத செயல்களுக்கும் படைத்தரப்பின் ஜனநாயக விரோத செயல்களுக்கும் எதிராகத் தமது பிரதேசத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஜனநாயக உரிமை இல்லையா? என்று பரதேசியார் கேட்டார்.

☆

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி? 24.03.2006 – 30.03.2006

| | | | |
|---|---|---|---|
| சூ ராகு | | செவ் | |
| புத யுரே | 24 பி.ப. 3 - 39 மகர-சந்<br>26 மா. 4 - 47 கும்-சந் | | சனி |
| சுக் நெப் | 28 மா. 4 - 52 மீன-சந்<br>30 மா. 5 - 06 மே-சந் | | |
| சந் | | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்)

மேடராசியில் பிறந்தவர்களுக்கு பொதுவாக குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வார்கள். தெய்வ அனுக்கிரகங்களும், பெரியோர் உதவிகளும் கிடைக்கும். எந்தக் கருமத்தையும் சாதித்து வெற்றி பெறலாம். தேகசுகம் சிறப்பாக இருக்கும். திருமண கருமங்கள் விரைவில் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு எல்லாக் கருமங்களும் வெற்றியாகவே முடியும். சக ஊழியரின் ஒத்தாசைகள் இருக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். நகை வியாபாரிகள் கூடுதல் நன்மை பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புண்டு. செய்தொழில் விருத்தியும், முன்னேற்றமும் உண்டு. மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி உண்டு. சித்திகளும் கிட்டும்.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2)

இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சச்சரவுகளும், நிம்மதிக் குறைவும் இருக்கும். எடுத்த கருமங்கள் தடைப்படும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். தேவையில்லாத பிரச்சினைகளும், பொருட்செலவும் ஏற்படும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும். திருமண கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களில் அதிகாரிகள் குற்றம் காண்பர். அரசாங்கத் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். ஊதிய உயர்வுகள் உடன் கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் போட்டி, பொறாமை ஏற்படும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். இயந்திரங்கள் ஒத்துழைக்காது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பரீட்சைகள் சாதகமாக அமையாது.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை நன்றாக இருந்தாலும் இடையிடையே சச்சரவுகளும் தோன்றும். எடுத்த கருமங்கள் தாமதத்தின் மேல் ஓரளவு கைகூடும். பணவரவு இருந்தாலும், அதற்கேற்ப செலவுகளும் அதிகரிக்கும். குடும்ப அங்கத்தவர்கள் ஒருவரோடொருவர் ஒத்துப் போனால் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். திருமண காரியங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புகளும், வேலைப்பளுவும் அதிகரிக்கும். ஆயினும். சக ஊழியர்கள் உதவுவார்கள். வர்த்தகர்களுக்கு விற்பனைகள் மத்திமமாகும். முதலீடுகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும். தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பது கடினம். ஆயினும், முயற்சி திருவினையாக்கும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் கூடிய ஊக்கம் தேவை.

## கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக அமையும். எடுத்தகருமங்கள் யாவும் வெற்றியளிக்கும். எதிர்பாராத பண வருவாய் வந்துசேரும். நண்பர்களால், புத்திரர்களால் உதவி கிடைக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம். உறவினர், நண்பர்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். திருமண விடயங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வரவேற்பும், மரியாதையும் இருக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் உண்டு. சிலருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பிரமாதமாக இருக்கும். பழைய கடன் நிலுவைகள் வந்து சேரும். முதலீடுகளால் நல்ல லாபம் கிட்டும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துக் கொண்டிருக்கும். நல்ல லாபமும் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னிலை வகிப்பர். பரீட்சைகளில் சித்தி கிடைக்கும்.

## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம்1)

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவும். பொருளாதார நிலை திருப்தியாக இருக்கும். புத்திரர்களால் உதவியும், மகிழ்ச்சியும் உண்டு. தொடங்கும் கருமங்கள் நல்லபடியாக வெற்றியைத் தரும். தேகசுகம் நன்றாக இருக்கும். உறவினர்களின் உதவி உண்டு. மங்கள கருமங்கள் கைகூடக்கூடிய வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் இருக்கும். மேலதிகாரிகளின் அனுசரணை கிட்டும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வருகை அதிகமாகும். முதலீடுகளால் லாபம் உண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். வருவாய் சிறப்படையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமும், சிறப்பும் உண்டு.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பவாழ்வில் கஷ்ட நஷ்டங்கள் அதிகரிக்கும். எடுத்த கருமங்கள் பலிதமடையாது. தொழிலுக்கேற்ப ஊதியம் கிடையாது. வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. திருமண காரியங்கள் நிறைவேறாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். அதிகாரிகள் கடுமையாக நடந்து கொள்வர். சக ஊழியரின் ஒத்துழைப்பு கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. நிதி பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு குறையும். அலைச்சல், பிரயாசை கூடும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். முயற்சி தேவை.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

துலா ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை சுமுகமாக இருந்தாலும் அவ்வப் போது சிறு பூசல்கள் தோன்றும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். பண வருவாய் இருந்தாலும், அதற்கேற்ப செலவுகளும் இருக்கும். புத்திரர்களால் அதிக உதவி ஏற்படாது. திருமண கருமங்கள் தாமதத்தின் பின் தான் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்பு அதிகமானாலும் சக உதவியுடன் சமாளிக்க முடியும். ஊதியம், உயர்வு முதலியன தாமதப்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகும். வாடிக்கையாளர் வரவு குறையும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் குறைவாக இருக்கும். பிரயாசைக்கேற்ற லாபமுண்டு. மாணவர்களுக்கு ஊக்கம் தேவை.

## விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பண வருவாய் திருப்திகரமாக இருக்கும். புத்திரர்களால் உதவி உண்டு. எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். பிரயாண வசதிகள் ஏற்படும். திருமண கருமங்கள் விரைவில் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு கீழ் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அதிகாரிகள் அனுசரணையுடன் நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். லாபம் அதிகரிக்கும். வங்கி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த லாபம் கிட்டும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு. உயர் கல்வி வாய்ப்புக்கள் கிட்டும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)

தனுசுராசியிற் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத பணவருவாய் கிடைக்கும். உறவினர்களின் கொண்டாட்டம் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகளும் புத்திரர்களால் உதவியும் கிட்டும். திருமணகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அனுசரணையும், கௌரவமும் கிட்டும். கீழ் உத்தியோகத்தர்கள் மதிப்புத் தருவர். வர்த்தகர்களுக்கு முதலீடுகளால் நல்ல லாபம் கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் நிகரலாபம் பெறுவர். தொழிலாளர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். இயந்திரங்களில் வேலை செய்வோர் அதிகலாபமடைவர். மாணவர்கள் கல்விச் சிறப்பும், பரீட்சைகளில் சித்தியும், பாரட்டும் பெறுவர்.

## மகரம்

(உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)

மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் கஷ்ட பலன்களே கூடுதலாக இருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். எடுத்த கருமங்கள் தடைப்பட்ட வண்ணம் இருக்கும். பணவருவாய் குறையும். எதிலும் பற்றாக்குறை நிலவும். தேகசுகமும் பாதிக்கப்படும். மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு, போக்குவரத்துக்களில் சிக்கல் தோன்றும். அதிகாரிகள் சீறி விழுவர். பொறுமையைக் கடைப்பிடிப்பது நன்று. வர்த்தகர்களுக்கு இலாபம் பெறவழி இருக்காது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளை தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையீனம் வலுக்கும். வேலைக்கேற்றவாறு வருவாய் இருக்காது. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடங்கல்கள் ஏற்படும். பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திதராது.

## கும்பம்

(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பண வருவாய் அதிகரிக்கும். எடுத்த கருமங்கள் வெற்றியாகவே முடியும். புத்திரர்களால் செல்வாக்கும் மகிழ்ச்சியும் உண்டு. செல்வாக்கு உயரும். குடும்பப் பெண்கள் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஈடுபடுவர். திருமண கருமங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்கள் உற்சாகமாகக் காணப்படுவர். பணிகள் சீராக நடக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். வியாபாரிகள் வெளிநாட்டுப் பொருட்களை விற்பதால் அதிக லாபம் பெறுவர். போட்டி, பொறாமைகள் மறைந்து விடும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளருக்கு தொழில் விருத்தி உண்டு. வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் சித்திபெறுவதுடன், உயர் கல்வி கற்க வாய்ப்புக்கள் கிட்டும்.

## மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

மீனராசியில் பிறந்தவர்கள் குடும்பத்தில் சந்தோசமாக காணப்படுவர். புத்திரர்களால் உதவிகள் உண்டு. வெளி நாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும். பணவருவாய் திருப்தி தருவதாக அமையும். தேகசுகம் பாதிப்படையாது. மங்கள கருமங்கள் விரைவில்நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் விரும்பியவாறு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவியாக இருப்பர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நன்கு விற்பனையாகும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். வங்கி உதவிகளும் கிடைக்கும். தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் பணியாற்றுவர். நல்ல வருமானம் கிட்டும். மாணவர்கள் விசேட சித்தி பெறுவர். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டு.

# கல்வி கற்காத சிறுவர்களின் விபரங்களைத் தர வேண்டும்!

**சிறுவர்களின் எதிர்காலம் சிறந்து விளங்க வேண்டுமென்றும் அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்படவும் இலங்கையில் பல பகுதிகளில் "சிறுவர் பாதுகாப்பு இலங்கை" என்ற அமையம் கொண்டு சிறுவர் சேவைகளை வழங்கி வருகிறது. யாழ்ப்பாணத்தில் நல்லூர் பின் வீதியில் இயங்கி வரும் கிளையின், பங்காளிகள் அபிவிருத்தி முகாமையாளரான கந்தையா மகேந்திரன் என்பவரை அலுவலகத்தில் சந்தித்து இது சம்பந்தமாக உரையாடினோம்.**



1983 ஆம் ஆண்டு போரூட், சர்வோதயா, ரெட்பானா, Save the children இணைந்து F.R.S.S என்ற பெயர் கொண்டு இயங்கி வந்தது. 1990 ஆம் ஆண்டில் இருந்து Save the children fund என்ற பெயரில் இயங்கியது. இன்று "சிறுவர் பாதுகாப்பு - இலங்கை என்ற பெயர் கொண்டு இயங்குகிறது.

எங்களுடைய நோக்கம் சிறுவர்களை மையப்படுத்திய, சிறுவர்களின் மேம்பாட்டுடன் தொடர்புடையதாக இருக்கிறது. அது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். சிறுவர்களின் கல்வி, பொழுது போக்கு, விளையாட்டு போன்ற துறைகளில் கூடுதலாக ஈடுபடத் தேவையான முக்கியமான செயற்பாடுகளைச் செய்து வருகிறோம். கல்வி என்று எடுத்துக் கொண்டால், கல்வித்திணைக்களங்கள் ஊடாக ஆசிரியர் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். யாழ்ப்பாணத்தில் 40 பாடசாலைகளுக்கு கணினிகளை வழங்கி யிருக்கின்றோம். சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் 15 பாடசாலைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

சிறுவர்கள் பாடசாலை செல்லாமல், தொழிலுக்குப் போகின்றார்கள் என்று சொல்கிறார்கள். யாழ்ப்பாணப் பகுதியில் எந்தளவு சிறுவர்கள் கல்வி கற்காமல் இருக்கி றார்கள் என்ற முழுமையான தரவு இருக் குமானால் அதனை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் சிறுவர் முன்னேற்ற ஏற்பாடுகளை மேற் கொள்ள முடியும். சரியான தகவல் களை ஒருவருமே தெரிவிக்க முன்வரு வதில்லை.

சிறுவர் பாதுகாப்புக்கான முதலீடுகள் லண்டன், நோர்வே மேலும் பல நிறுவனங்களில் இருந்து கிடைக்கின்றது. நாகர்கோவில், மண்டைதீவு, காரைநகர் போன்ற இடங்களில் இராணுவமுகாமாக இருந்த பாடசாலைகளை மீட்டுக் கொடுத்திருந்தோம். இப்பொழுது மறுபடியும் பாடசாலைகள் முகாமாக மாறியிருக்கின்றன.

அனைத்துத் திட்டங்களையும் பங்காளிகளுக்கூடாகத்தான் செய்து வருகிறோம். பங்காளி நிறுவனங்களான வெண்புறா, சர்வோதயா போன்ற பல நிறுவனங்களினூடாக செய்து வருகின்றோம். குறைந்த வளங்களைக் கொண்டு கூடிய வேலைகளைச் செய்த காலம் சென்று விட்டது. இப்பொழுது கூடிய வளங்களைக் கொண்டு குறைந்த வேலைகளைக்கூட முழுமையாகச் செய்கின்றார்கள் என்றால் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

நாங்கள் திட்டத்திற்காகத்தான் மக்களை பாவிக்கின்றோம். மக்களுக்காக திட்டத்தைப் பாவிக்கவில்லை. இப்படிப்பட்ட நிறுவனங்களில் முன்னைய காலங்களில் தொண்டர்களாகத் தான் வேலைக்குச் சேர்ந்தார்கள். இன்றைய காலங்களில் கூடுதலான சம்பளம் என்ற ரீதியில் வேலைக்குச் சேருகின்றார்கள். எங்களில் வந்து உணர்வுபூர்வமாக வேலை செய்யக்கூடிய தன்மை யாருக்கும் கிடையாது என வருத்தத்துடன் தெரிவித்தார் அவர்.

நேர்காணல்
– செல்வா

# சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் குருபூசை தினத்தை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்—

மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் குருபூசை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, அவதானம், மனனம், பண்ணிசை, பொது அறிவு, கதை கூறும்போட்டி மற்றும் பொது ஆர்வலர்களுக்கான கட்டுரைப்போட்டி என்பன நடைபெறவுள்ளன.

கட்டுரைப்போட்டிக்கான தலைப்புக்களாக - சைவத்தின் காவலர் கதிரவேற்பிள்ளை, நாவலரின் அடிச்சுவட்டில் கதிரவேற்பிள்ளை, சதாவதானியின் நாவன்மையும் தர்க்கவாத நுட்பமும், சதாவதானி இன்றிருந்தால் என்பன கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகள் ஏ4 தாள்களில் 5பக்கத்துக்கு மேற்படாதிருத்தல், ஆக்கங்கள் அழகானதும், தெளிவானதுமான கையெழுத்துப்பிரதியாகவோ அல்லது அச்சுப்பிரதியாகவோ இருத்தல், போட்டியாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தனியொரு தாளில் எழுதப்பட்டு ஆக்கத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அத்துடன், ஆக்கங்கள் சொந்தமுயற்சியிலானவையாக இருத்தல் வேண் டும்.

போட்டிக்கான ஆக்கங்கள் யாவும் 05-04-2006க்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும், ஏனைய போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இந்த மாதம் 30ஆம் திகதியாகும்.

குருபூசைத்தினப் போட்டிகள், பருத்தித்துறை, தம்பசிட்டி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் ஏப்ரல் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் ஏப்ரல் 16ஆம் திகதி நடைபெறும் சதாவதானியின் 99வது ஆண்டு நினைவு விழாவில் வைத்து வழங்கப்படும்.

போட்டிகளுக்கான ஆக்கங்கள் யாவும் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

# பாதிக்கப்பட்ட அலுவலர்களுக்கான பதிவுகள் குறித்த நடைமுறை

யாழ்ப்பாணம்—

1983ஜூலைக்கு பிறகு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தமது பாதிப்பு தொடர்பாக- திணைக்கள தலைவர்கள் ஊடாக தங்களுக்கு நியமனம் வழங்கிய அதிகாரிகளுக்கே மனுச்செய்ய வேண்டும்.

இது தொடர்பான புதிய சுற்று நிருபம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்று நிருபப் பிரதிகள் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1983 ஜூலைக்கு பிறகு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட அரச அலுவலர்கள் உள்ளூராட்சி சேவை அலுவலர்கள்,கூட்டுறவு அலுவலர்கள் தொடர்பாக மனுச்செய்யும் ஒருவர் 60வயதுக்கு உட்பட்டவராய் இருக்கவேண்டும்.

. 1983ஜூலை தொடக்கம் 1995 டிசம்பர் 31 ஆம் திகதி வரை பாதிக்கப்பட்ட அலுவ லர்கள் பழைய சுற்று நிருபத்தின்படி மனுச்செய்து நிராகரிக்கப்பட்டிருந்தால் தற்போது புதிய சுற்று நிருபப்படி மீள மனுச் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# உரமானியம் வழங்குவதற்காக நெற்காணி இடாப்பு தயாரிப்பு!

யாழ்ப்பாணம்—

2006,2007ம் ஆண்டுக்கான பெரும்போகச்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவதற்கு ஏதுவாக கமத்தொழில் நெற்காணி இடாப்பு தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த உரமானியத்தின் கீழ் 2006 ஆம், 2007ஆம் ஆண்டுக்கு பெரும்போகத்துக்கு வி1, ரி.டி.எம், யூரியா ஆகிய மூன்று உரங்களும் வழங்கப்படவுள்ளன. இந்த உரமானியம் 5 ஏக்கருக்கும் அதற்கு உட்பட்ட விவசாய நிலங்களுக்கும் வழங்கப்படும்.

அத்துடன், எதிர்காலத்தில் கமத்தொழில் காணி இடாப்பில் பெயர் உடையவர்களுக்கு மட்டுமே விவசாயக்கடனுக்கான சிபார்சு மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் விவசாய காப்புறுதி, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தரால் இது தொடர்பான விபரங்கள் திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கமநல சேவைகள் நிலையங்களில் கமக்கார அமைப்பு உதவியுடன் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு சகல விவசாயிகளும் கேட்கப்பட்டுள்ளனர்.

குத்தகை செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் அதற்கான குத்தகை சீட்டையோ அல்லது உறுதி கடிதத்தையோ கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். காணி உரிமையாளர் வெளிநாட்டில் இருந்தால் அதற்கான அற்றோனிக் தத்துவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போது வயற்காணிகளுக்கு தயாரிக்கப்படும் இடாப்பு அடுத்த கட்டமாக மேட்டுக்காணிகளுக்கும் தயாரிக்கப்படும் என யாழ். கமநல சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ற)

# அரச ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட ஆங்கில மொழிப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்—

அரச கருமமொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவப் பயிற்சிநெறித் திணைக்களத்தால் அரச ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட அடிப்படை ஆங்கிலப் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் கடமை நாட்களில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிராந்திய ஆணையாளர் அறிவித்தார்.

இந்தப் பயிற்சி நெறியில் சித்தியடைந்த ஊழியர்களின் விபரம் வருமாறு -

பி.தர்மசங்கரன் (வலி. கிழக்குப் பிரதேசசபை, நீர்வேலி), ஏ. திருநாவுக்கரசு (தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்), வி. யோகராசா (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), கே.சௌந்தரராஜன் (பிரதேச சபை, ஊர்காவற்துறை), பி. ஜெயகரன் (வலி. வடக்குப் பிரதேசசபை, வலிகாமம்), என்.சச்சிதானந்தம் (பிரதேசசபை, நல்லூர்), கே. ஞானேஸ்வரி (பிரதேசசபை, நல்லூர்), வி.சண்முகம் (பிராந்திய ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), டி.எஸ்.சொலமன் (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), எஸ்.சுசீந்திரராஜன் (பிரதேசசபை, நல்லூர்), ஆர்.ஜக்கலின் (மாவட்ட திட்டமிடல் அலுவலகம், யாழ்ப்பாணம்), கே.நடராஜா (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), எஸ்.சிறிகரன் (மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), பி.மஞ்சுளா (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜே.பத்மாவதி (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ரி.சங்கமுகநாதன் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), எஸ்.தனராஜ் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ரி. சிவனாதசர்மா ( மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), கே.வீணா (பிரதேச சபை, ஊர்காவற்துறை), எஸ்.சிவமோகன் (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), எஸ்.சாரதாதேவி (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), பி.ஜசீலா (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), எஸ். மாணிக்கம் (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), ஐ.சிவலோகநாதன் (பிரதேச சபை, வலி.வடக்கு), பி.வைரமுத்து (பிரதேசசபை, வலி.வடக்கு), ஏ.கணேசானந்தராஜா (பிரதேசசபை, வலி. வடக்கு), எம்.ராதா (வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்), எஸ்.நாகமுத்து (வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), எஸ்.சந்திரயோகன் (வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), பி.ராசமணி (வலயக் கல்வி அலுவலகம்,வடமராட்சி), எஸ். தேவகி (வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), ஆர்.சுதர்சன் (வலயக் கல்வி அலுவலகம் வடமராட்சி), எஸ்.லிங்கேஸ்வரன் (வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), வி.மைதிலி (வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி), ஆர். ரமேஸ் (வலயக் கல்வி அலுவலகம், பருத்தித்துறை), ஆர். சத்தியானந்தன் (நகரசபை, பருத்தித்துறை), ரி.ராதிகா (நகரசபை, வல்வெட்டித்துறை), எஸ்.திருஞானசுந்தரம் (நகரசபை, வல்வெட்டித்துறை), எஸ்.பரமேஸ்வரன் (பிரதேசசபை, கரவெட்டி), சி.நாகேந்திரம் (மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பருத்தித்துறை), பி.ரவிச்சந்திரன் (மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்,பருத்தித்துறை), எஸ். பிரணவன் (மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பருத்தித்துறை).

## நமது ஈழநாடு

## சிறுவர் அரங்கம் – துருவன் நடத்திய

## போட்டி முடிவுகள்

### குறுக்கெழுத்துப் போட்டி இல.2

☆ முதலாம் பரிசு - செல்வன் வீரசிங்கம் றேகன் - தரம் - 10
யா/ நாவற்குழி ம.வி.
(மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 500 பணப் பரிசு)

☆இரண்டாம் பரிசு - செல்வி லஜந்தா குணசேகரம்
நாவற்குழி, கைதடி.
(இல.303, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறிமுருகன் தொலைத்தொடர்பகம், முகவர் தபால் நிலைய நிறுவனத்தினரின் ரூபா 300 பணப் பரிசு)

☆ மூன்றாம் பரிசு - செல்வி கனகரத்தினம் துளசி - தரம் - 11
யா/இந்து மகளிர் கல்லூரி.
(ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த அமரர் பரராஜசிங்கம் சுதன் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 200 பணப் பரிசு)

### பொது அறிவுப் போட்டி இல.2

☆முதலாம் பரிசு - செல்வி சி. கலையரசி - தரம் - 3D
யா/இந்து ஆரம்ப பாடசாலை.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் திருமுருகன் கொம்நெற் நிறுவனத்தினர் வழங்கும் ரூபா 300 பணப் பரிசு)

☆ இரண்டாம் பரிசு - செல்வன் சுப்பிரமணியம் பிரணவன்
யா/வேலணை மேற்கு, நடராஜர் வித்தியாலயம்.

மூன்றாம் பரிசு - செல்வன் தியாகலிங்கம் பரதன்
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆசீர்வணிக நிலையத்தினரின் ரூபா 200, 100 பெறுமதியான பணப் பரிசில்கள்)

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது பாராட்டுக்கள். இவர்கள் தங் களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றினைச் சமர்ப்பித்து ஞாயிறு மற்றும் விடுமுறை நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் எமது அலுவலகத்துக்கு வந்து தமது பரிசுக் கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம ஆசிரியர்

# தேர்தலில் வெற்றி மட்டுமே இலக்கு நட்புக்காகத் தோற்றுவிட முடியாது!

## என்கிறார் திருமாவளவன்



சென்னை—

நட்புக்காக நாங்கள் தோற்றுவிட முடியாது. எனவே பா.ம.க. வேட்பாளரை எதிர்த்து போட்டியிடுவோம் என்று தொல். திருமாவளவன் கூறினார்.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச்செயலாளர் தொல், திருமாவளவன் அளித்த பேட்டியில் -

கேள்வி:- ஒரு வாரப்பத்திரிகை எடுத்த கணக்கெடுப்பில் அ.தி.மு.க. வெற்றிபெறும் என்று கூறியிருப்பது தவறானது என்று கருணாநிதி கூறியுள்ளாரே?

பதில்:-என்னைப் பொறுத்தவரை கருத்துக் கணிப்பைப் பொருட்படுத்துவது இல்லை. இந்தக் கருத்துக் கணிப்புக்கு கருணாநிதி ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்று தெரியவில்லை.

கேள்வி:- உங்கள் நண்பரான டொக்டர் ராமதாஸ் கட்சியின் வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடும் சூழ்நிலை ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்.

பதில்:- தேர்தலில் வெற்றி என்பது மட்டும் தான் இலக்காக இருக்குமே தவிர, அதில் நட்பு - உறவு என்கிற அணுகுமுறையைக் கையாண்டால் கூட்டணி தர்மத்தை மீறுவதாக அமையும். ஆகவே, நாங்கள் போட்டியிடும் தொகுதியில் தி.மு.க. கூட்டணியிலுள்ள பா.ம.க. உட்பட எந்தக் கட்சி நின்றாலும் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுவோம்.

கேள்வி:- அ.தி.மு.கவில் கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக நம்புகின்றீர்களா?

பதில்:- அ.தி.மு.க. கூட்டணி 200 தொகுதிகளில் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும். கூட்டணி ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

கேள்வி:- தேசிய முற்போக்குத் திராவிடகழகத் தலைவர் விஜயகாந்த் அ.தி.மு.க. கூட்டணியில் சேராமல் தனித்துப் போட்டியிடப் போவதாகக் கூறியிருக்கின்றாரே?

பதில்:- சட்டசபைத் தேர்தலில் அவர் தனது வலிமையை எடை போட்டுப் பார்க்க விரும்பியிருக்கலாம். எனவேதான் அவர் தனித்துப் போட்டியிட முடிவு செய்திருக்கலாம் என்று கூறினார்.

# நாட்டில் மாற்றம் ஏற்பட எனக்கு வாக்களியுங்கள்

## என்கிறார் விஜயகாந்த்



வேலூர்—

எனக்கு வாக்களித்தால் நாட்டில் மாற்றம் வரும் என நடிகர் விஜயகாந்த் தெரிவித்தார். வேலூர் மாவட்டத்தில் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் பேசியதாவது:

வேலூர் மாவட்டத்துக்கு உரிமையோடு வாக்குகேட்டு வந்துள்ளேன். எனக்கு பெண் கொடுத்த மாவட்டம். இன்னும் உரிமையாக சொல்லவேண்டும் என்றால் உங்கள் மாப்பிள்ளையாக வந்திருக்கிறேன். எனக்கு அதிகமான ரசிகர் மன்றங்கள் இந்த மாவட்டத்தில்தான் உள்ளன.

சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் ஏழைகள் - ஏழைகளாக இருக்கின்றனர். ஏழைகளுக்கு எவ்விதமான அடிப்படை வசதிகளும் கிடைக்கவில்லை. இந்தப்பகுதியில் இதுவரை தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. போக்குவரத்து வசதிகள் இல்லை.

ஆனால், நீங்கள் தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும் மாறி மாறி வாக்களித்து வருகிறீர்கள். இந்தமுறை எனக்கு வாக்களியுங்கள். எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப்பாருங்கள் தமிழகத்தை மாற்றிக்காட்டுகிறேன். 50 கட்சிகள் ஒன்று சேர்ந்தால் கூட என்னை அசைக்க முடியாது என விஜயகாந்த் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படையினரின் எதிர்ப்பை மீறி ஏற்றப்பட்டது புலிக்கொடி!

யாழ்ப்பாணம் —

யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று அன்னை பூபதி நினைவு நிகழ்வில்- படையினரின் எதிர்ப்பையும் மீறி மாணவர்களால் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

512 ஆவது பிரிகேட் இராணுவ கட்டளைத் தளபதி சம்பவ இடத்துக்குச் சென்று தமிழீழ தேசியக் கொடியை ஏற்றக்கூடாது என்று கூறிய போதும் மாணவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை.

உயர் தொழில்நுட்ப கல்லூரி வாசலில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பதற்றமான சூழல் நிலவியபோதும் புலிக்கொடி ஏற்றப்பட்டது.

அதேவேளை, தொழில் நுட்பக் கல்லூரி வாசலுக்கு வந்த மாணவர்களுடன் படையினர் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர். இதனைப் படம் பிடித்த ஊடகவியலாளர்களும் எச்சரிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளிடம் மாணவர்கள் தமது நியாயமான கோரிக்கைகளை தெரியப்படுத்தினர். தமிழீழ தேசியக்கொடி நண்பகல் 1 மணியளவில் நிகழ்வு முடிந்த பின்னர் இறக்கப்பட்டது. (ரி,நி,த)

## கடையினுள் இருந்து வயோதிபரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்.நாவலர் வீதியில் ஐந்து சந்திப்பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் இருந்து வயோதிபரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்தவர் மானிப்பாய் வீதி சோனக தெருவை சேர்ந்த அந்தோனி பர்னாந்து கிறிஸ்ரோ (வயது65) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி கடை உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்தே சடலம் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவரிடம் தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பன காணப்பட்டன. விசேட அடையாள அட்டையில் இவர் ஒரு சாரதி என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரது மரணம் இயற்கையாக ஏற்பட்டது எனவும் மருத்துவ பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உறவினர் எவரும் உரிமை கோராத நிலையில், சடலம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ரி)

## சிப்பாய் மரணமான வழக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றம்!

சாவகச்சேரி —

சக சிப்பாயை பகிடிவதைக்குள்ளாக்கி மரணம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கும் 17 படையினரையும், மேலதிக விசாரணைக்காக யாழ். மேல் நீதிமன்றில் பாரப்படுத்த சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

2002 ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி முகமாலை முன்னரங்க நிலையில் சக படையினரின் பகிடிவதைக்குள்ளாகிய சிப்பாயொருவர் உயிரிழந்தார்.

இதுதொடர்பான விசாரணை கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் குறித்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ. பிரேமசங்கர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்தவேளையில், எதிர்த்தரப்பு சாட்சியங்களை அளிக்குமாறு குற்றஞ்சாட்டப்பட்ட படையினரை நீதிவான் அழைப்பு விடுத்திருந்தார். எனினும், இந்த வாக்குமூலத்தை யாழ். மேல்நீதிமன்றில் விசாரணைகளின் போது அளிக்க விரும்புவதாக குறித்த 17 படையினரும் தமது சட்டத்தரணியூடாக நீதிமன்றில் தெரிவித்ததையடுத்தே விசாரணையை மேல் நீதிமன்றில் பாரப்படுத்த நீதிவான் உத்தரவிட்டார்.

## ஜே.வி.பி, ஹெல...

பல்வேறு கட்சியினரும் சுதந்திரக் கட்சியில் தொடர்ந்து இணைந்து வருகின்றனர். எமது அரசாங்கம் தொடர்ந்து இயங்குவதற்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரது ஆதரவு மிகவும் முக்கியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பங்கேற்று பேசிய சந்திரிகாவின் சகோதரரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான அனுர பண்டாரநாயக்க - எதிர்வரும் 12 ஆண்டுகாலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீடிப்பதற்கு தாம் முழு ஒத்துழைப்பு அளிப்பதாகத் தெரிவித்தார்.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டை வலியுறுத்திக்கொண்டு நோர்வே அனுசரணையாளர்களை வெளியேற்ற வேண்டும் என்று ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் இரு கட்சிகளினது ஆதரவும் எமக்கு அவசியமானது என்று மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளமை முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

### வடமராட்சி...

தொழில் செய்யக்கூடாது என்ற மூன்று நிபந்தனைகளுடனேயே தொழில் செய்வதற்கு கடற்படை அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டது. (வ)

## சமாதானப் பொறி...

லாமல், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குச் சாதகமான பலாபலன்களைக் கொடுக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றியை ஜீரணிக்கமுடியாமல் சிங்கள தேசம் பல்வேறுபட்ட சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இது, தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றி இலக்கை நோக்கி போராட்டத்தை மேலும் வேகமாக நகர்த்திக் கொண்டு செல்லும் என்பதுதான் உண்மை.

ஏனெனில், போராட்ட வரலாற்றில் தமிழர்களுக்கு அவலத்தை தந்தவனுக்கு அவலத்தைத் திருப்பிக் கொடுத்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பொறிவைத்து பொறிக்குள் வீழ்த்த நினைத்த அரசியல் சக்திகளுக்கும், சர்வதேச சக்திகளுக்கும் எதிராக அந்தப் பொறியை திருப்பி வைத்திருக்கின்றோம்.

இந்த சமாதானச் சூழல் மூலமாக தமிழ் மக்களை விடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்திவிடலாம் என்றும், தமிழ் மக்களின் போராட்ட மனநிலையை நீர்த்துப் போகச் செய்யலாம் என்றும் அதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலம் குன்றிய விடுதலைப் போராட்டமாக மாற்றி அமைக்கலாம் என்ற நோக்கத்தோடு அரசால் இந்தச் சமாதானச் சூழல் நீட்டப்படுகிறது.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு வைக்கப்பட்ட இந்தச் சமாதானப் பொறியை மிகவும் லாவகமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லுகின்ற ஒரு அரங்காக சமாதானத்தை விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன

நமது ஈழநாடு பத்திரிகையில் உங்களின் ஆக்கங்களும் வெளிவரவேண்டுமா?

சுயமாக எழுதிய கவிதைகள், கதைகள், கட்டுரைகள், துணுக்கு கள் எதுவாயினும் எமக்கு அனுப்பிவையுங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும்.

எழுதி அனுப்பவேண்டிய முகவரி:
பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## டைனமட் வெடித்து மீனவர் காயம்!

மன்னார் —

மன்னார் - தாழ்வுபாடு பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை டைனமட் வெடித்ததில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் மீனவரின் ஒரு கையும் காலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

தற்போது அவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய கடற்படை அதிகாரி கொழும்புக்கு விஜயம்!

கொழும்பு —

இந்திய அரசின் பிரதம சமுத்திரவியல் நிபுணரான றியர் அட்மிரல் டி. ஆர்.ராவ் கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்து இலங்கை கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

கடற்படை தலைமையகத்துக்கு விஜயம் செய்த இவர் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவைச் சந்தித்து உரையாடினார்.

இதன்போது இலங்கை கடற்படை குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### சுதந்திரக்...

கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது பலத்தை அறிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் புலனாய்வுப் பிரிவுகள் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படும் என்ற தகவல் கிடைத்துள்ளது.

ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய தனித்துப் போட்டியிட்டு கிராமிய மட்டத்தில் கணிசமான இடங்களைக் கைப்பற்றும் எனக்கூறப்படுகிறது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியே கூடுதல் சபைகளைக் கைப்பற்றும் என்றும் புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பெரும் பின்னடைவை எதிர்நோக்கியிருப்பதால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சிகள் உள்ளிட்ட தனது பாதைகள், அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் ஒருகட்டமாகவே ஜே.வி.பி, ஹெல உறுமய ஆகியவற்றின் ஆதரவு தனது அரசுக்குத் தேவையென தெரிவித்திருப்பதாகவும் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

### திருமலையில்...

ஆகியவற்றைக் கண்டித்து திருகோணமலை மாவட்ட பொங்கி எழும் மக்கள் சமூகத்தினரால் இன்று மாவட்டம் தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### மணற்காட்டில்...

வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு - மணற்காடு பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் அந்தப்பகுதியில் மண் ஏற்றுவதற்காக சென்றவர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்டோர் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், மேற்படி இளைஞர் மட்டும் படையினரால் இன்னமும் விடுவிக்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. (த,வ)

## கைதான மீனவர்களை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி நேற்று சந்தித்து பேசினார்!

யாழ்ப்பாணம் —

பருத்தித்துறை - முனை கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு - காங்கேசன்துறையில் பொலிஸ் தடுப்புக்காவலில் உள்ள மீனவர்கள் ஐவரையும் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தரணி சந்தித்து கலந்துரையாடினார்.

பருத்தித்துறை - முனை கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஐவரும் தாம் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது வழிதவறி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் வந்ததாகத் தெரிவித்தனர்.

இவர்களின் படகில் ஆயுதம் இருந்ததாக கடற்படையினர் தெரிவித்த போதும் - மீனவர்கள் தாம் தொழிலுக்கு ஐஸ் பெட்டியையும், தொழில் உபகரணங்களையும் மட்டுமே வைத்திருந்ததாக மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

இவர்களில் அருணாசலம் டேவிட், வீரசிங்கம் மனோகரன், முத்துவேல் சிறிஸ்கந்தராசா, பிரான்சிஸ் மனோகரன் ஆகிய நான்கு பேரும் திருகோணமலையையும், பொடியப்பு சுபசேன இரணைதீவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கொழும்பு துறைமுகத்தில் பாகிஸ்தான் போர்க்கப்பல்!

கொழும்பு —

பாகிஸ்தான் கடற்படையின் பிரதான போர்க்கப்பல்களில் ஒன்றான பி.என்.எல். ஷாஜகான் நேற்றுக்காலை 7மணியளவில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

368 கடற்படையினர் பணியாற்றும் இப்போர்க்கப்பல் - 3400 தொன் எடைகொண்டது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை கொழும்பில் நிலைகொண்டிருக்கும் இந்தப் போர்க்கப்பல் - இலங்கை கடற்படையுடன் இணைந்து போர்ப்பயிற்சியில் ஈடுபடவுள்ளது.

நேற்று இந்தக் கப்பலில் இடம்பெற்ற பாகிஸ்தான் தேசிய தின நிகழ்வில் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் தனது நாட்டு தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

## கலைமாணி இறுதிப் பரீட்சை ஏப்ரல் 17 இல் ஆரம்பம்!

கொழும்பு —

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு இறுதி கலைமாணிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கடந்த காலங்களில் இந்தப் பரீட்சை கண்டியில் மட்டுமே நடைபெற்று வந்தது. தற்போது கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய நகரங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற கலைமுதற்தேர்வு பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இந்த இறுதிப் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படுவர். இந்தப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் இந்தமாத இறுதியில் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொது நிதி வீண் விரயம்
## அமைச்சர்கள் எண்ணிக்கையை குறைக்குமாறு வேண்டுகோள்!

கொழும்பு —

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் அமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சில அமைச்சர்கள் பொது மக்களின் நிதியை பாரியளவில் விரயம் செய்வதாகவும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை போன்ற நாடுகளில் மாத்திரமே அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது தங்களது உறவினர்களையும் அழைத்துச்சென்று பொதுமக்களின் நிதியை வீண் விரயம் செய்கின்றனர்.

இதனைத் தவிர்ப்பதற்காக அவர்கள் தங்களது தனிப்பட்ட பயணங்களுக்கு சொந்தப் பணத்தைச் செலவிட வேண்டும். அமைச்சர்களின் இவ்வாறான நடவடிக்கைகளை ஜனாதிபதி கவனத்தில் எடுத்து செயற்படுத்துவது வரவேற்கத்தக்கது.

இந்த நிலையில், பொதுமக்களின் நிதியை வீண் விரயமாக்குவதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அமைச்சர்கள் மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேணடும் எனவும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் கோரிக்கை விடுத்துள்ளது.

(01)

### ஊர்காவலர்...

தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட இருந்தனர்.

எனினும், மூதூர் பிரதேச முஸ்லிம் சமூகத்தினரின் உறவை வலுப்படுத்தும் நோக்கில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகப்பிரமுகர்களிடம் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் இவர்களை கையளித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.03.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## தமிழ் - I

### (பகுதி -I)

முதலாம் பகுதியின் இரு வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

01) அ) மேல்வரும் பாடல்களில் எவையேனும் மூன்றுக்கு இக்கால உரை நடையில் பொருள் தருக.
ஆ) தடித்த எழுத்திலுள்ள தொடர்களின் பொட்சிறப்பை எழுதுக.

(i) பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதரவிட்ட நுமருந் தவறிலர்
**நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்**
பறையறைந்தல்லது செல்லற்க வென்னா
இறையே தவறுடையான்

(ii) **நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது

(iii) சேனை வீரருந் திருநன் மாநகர்
மானை மாந்தரு மற்று ளோர்களும்
ஏனை வேந்தரும் பிறரும் யாவரும்
கோனை யெய்தினார் குறையுஞ் சிந்தையார்

படஞ்செய்ந் நாகணைப் பள்ளி நீங்கினான்
இடஞ்செய் தொல்குலத் திறைவ னாதலால்
தடஞ்செய் தேரினான் **தானு நீரினால்**
**கடஞ்செய் வானெனக் கடலின் மூழ்கினான்**

(iv) இருகதி குறுவான் அதையும் உன்னிடமே
இறக்குவன் உனைப் பரிபாலித்து
அருளவும் வணங்கித் துதிக்கவும் மிகுந்தோர்
தமையமைத்து அருள்வன் அன்பு ஓங்கி
**பெருகுபார்ப்பு அதனைத்தேடி வந்து அடையும்**
**பறவைபோல்** பிள்ளையைத் தேடி
வரும் அனை யினைப்போல் எனது கல்குகள் உன்
மாட்டினில் வருகவும் புரிவேன் (24 புள்ளிகள்)

(02) பின்வரும் கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஓதிய மறைகள் உன்னை
உயர்ந்தவன் என மொழிந்தே
தோதாகி உலகும் உன்றன்
சுகத்துக்கு வளையு மென்னும்
பாதார விந்தம் சென்னி
பணித்திடும் சிருஷ்டி நல்ல
ஆதாரம் அமரர் உன்றன்
அடியினைக் கௌர வித்தார்
மனிதா நீ யார்? இந்த மண்ணில்
மதிப்புள்ள ஜந்து நீயா?

ஆந்தையின் அலறலுக்கும்
அர்த்தம் நீ காணுகின்றாய்
சேர்ந்த ஓர் காகம் கத்த
சிந்தையை இழப்பாய் பூனை
பாய்ந்திடிற் பயந்து போவாய்
பல்லியின் நச்சொலிக்கே
மாய்ந்திடு வாய்உ னக்கே
இவையெல்லாம் உயர்ந்த தாயின்
மனிதா நீ யார்? இந்த மண்ணில்
மதிப்புள்ள ஜந்து நீயா?

சிங்கத்தின் கர்ச்ச னைக்கும்
சிறுத்தையின் உறுமலுக்கும்
தும்பியின் பிளிற லுக்கும்
சீறிடும் பாம்பி னுக்கும்
தங்குநீர் முதலை கட்கும்
தாங்குமோ உயிர் என்றீங்கு
வந்தித்து வாழுகின்றாய்
மறையினால் உயர்வு கண்டாய்
மனிதா நீ யார்? இம் மண்ணின்
மதிப்புள்ள ஜந்து நீயா?

(i) மனிதப் பிறவி பற்றி இந்தக் கவிதையில் கூறப்பட்டவற்றைத் துலக்குக.
(ii) மனிதனது மூட நம்பிக்கைகளாக எவற்றைக் கவிஞர் கருதுகிறார்?
(iii) இயற்கைக்கு அஞ்சுதல் பற்றி கவிதையிற் கூறப்பட்டவற்றை விபரிக்குக.
(iv) மனிதா நீ யார்? இம் மண்ணின் மதிப்புள்ள ஜந்து நீயா? என வினவக் காரணம் யாது?

(16 புள்ளிகள்)

### பகுதி 11

03) சான்றாண்மை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் பின்வருவன பற்றிக் கூறியவற்றைத் துலக்குக.
அ) சால்பிற்குரிய பொதுவான குணங்கள்
ஆ) சால்பிற்குரிய சிறப்பான குணங்கள்
இ) சான்றோர் சிறப்பு
ஈ) அணிச் சிறப்புகள் (15 புள்ளிகள்)

04) பரதன் பரத்துவாசரை வணங்கியது முதல் இலக்குவன் குன்றேறிப் படையை நோக்கியது வரையான பகுதியில் பின்வருவனவற்றைந் துலக்குக.
அ) பரத்துவாச முனிவரது பெருமை
ஆ) விருந்துபசாரச் சிறப்பு
இ) தேவமாதரது அழகு நலம்
ஈ) நாற்படையின் பெருமை (15 புள்ளிகள்)

05) கவிஞர் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளையின் சிலுவைப்பாடு பகுதியில் பின்வருவன வற்றை விளக்குக.
அ) சிலுவை சுமந்து இயேசுபிரான் பட்ட பாடுகள்.
ஆ) கண்டோர் அடைந்த துன்பம்.
இ) எருசலேம் நகரம் பற்றிய வருணனை.
ஈ) எருசலேம் நகரப் பெண்களுக்கு இயேசுபிரான் கூறிய ஆறுதல்கள்.
(15 புள்ளிகள்)

06) பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'தமிழும் பிறமொழியும்' என்ற கட்டுரையில் பின்வருவனவற்றைத் துலக்குக.
அ) திராவிட மொழிக்குடும்ப மொழிகள், ஆரிய மொழிக் குடும்ப மொழிகளை அட்டவணைப்படுத்துக.
ஆ) தமிழுக்கும் ஏனைய திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்பை விபரிக்குக.
இ) தமிழிலிருந்து பிறமொழிகளில் கலந்து வழங்கும் சொற்கள் பற்றிக் கட்டுரையாசிரியர் கூறியவற்றைத் தருக.
(15 புள்ளிகள்)

07) சி.வைத்திலிங்கனின் பாற்கஞ்சி என்ற சிறுகதையில்,
அ) ஏழை விவசாயிகளின் எதிர்பார்ப்புக்கள்,
ஆ) ஏமாற்றங்கள்,
இ) வாழ்க்கை முறைகள்,
ஈ) ராமு எனும் பாத்திரப்படைப்பு
என்பனவற்றைத் துலக்குக. (15 புள்ளிகள்)

08) பாரதியாரின், வெண்ணிலா, என்ற கவிதையில்,
அ) பாரதியாரின் இயற்கையழகு நுகர்ச்சி,
ஆ) பரோபகார சிந்தை,
இ) உவமை,உருவக அணிச் சிறப்புகள் என்பனவற்றைத் துலக்குக.
(15 புள்ளிகள்)

09) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ) தேளந் தீந்தொடைப் பாடலில் கிள்ளிவளவனது புகழ்.
ஆ) சிலப்பதிகார வழக்குரைத்த காதையில் கோப்பெருந்தேவி அரசனிடம் சென்ற காட்சி.
இ) நாச்சியார் திருமொழியில் வைணவ திருமண நடைமுறைகள்.
ஈ) பெட்டிக்கடை நாரணன் கவிதையின் சிறப்பியல்புகள்.
உ) இராம நாடகக் கீர்த்தனையில் இராவணன் கொலுவிருந்த கோலம்.
(15 புள்ளிகள்)

## தமிழ் - II

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும், இரண்டாம், மூன்றாம் பகுதிகளிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் உள்ளிட்டு மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - 1

01) மேல்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ) பேராசிரியர் ம.மு.உவைஸின் தமிழ்ப்பணிகள்.
ஆ) ஈழத்துத் தமிழ்க் குழந்தை இலக்கியங்கள்.
இ) சூழல் பேண் நடைமுறைகளின் அவசியம்.
ஈ) தமிழ் மொழிவளர்ச்சியில் நவீன தொழினுட்பத்தின் செல்வாக்கு.
உ) சிறுவர் உலகுக்கோர் அன்புக் கைகோர்த்தல்.
ஊ) ஊக்கமது கைவிடேல் (20 புள்ளிகள்)

02) பின்வரும் அ உரைப்பகுதியையும் ஆ செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) கடலலை படபடவென்று கரையில் மோதுவதை அவன் கண்டான். ஒவ்வொரு தடவையும் உள்ளே போய்த் திரும்புகிற அலை எதையாவது கொண்டுவந்து வெளியிற் போடுகிறது. நண்டுகள், ஒருவகை நத்தைகள், கிளிஞ்சல்கள், சங்குகள், தெறிக்கப்பட்டு விழுந்த சிறுகட்டைகள், எதையாவது கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறது. அறிவு என்பது என்ன? இது தான்! படிக்கின்ற பொழுது உள்ளே போய் ஒரு புதுப்பொருளை வெளியே கொண்டு வந்து தள்ளுகிறது? அவ்வளவு தான்! நல்ல நிலவொளி வெண்ணிற நுரைகள் பொங்கிப் பொங்கிக் கரைக்குவந்து சேர்வதை அவன் கவனித்துக் கொண்டே இருந்தான். பத்துப் பதினைந்து அடி உயரம் கூட அலை மேலே எழும்பிற்று. இவ்வளவு பெரிய அலைகளையா சிறிய தோணிகள் கிழித்துக் கொண்டே செல்கின்றன. இல்லை! கடலின் கரைப்பகுதியைக் காட்டிலும் உட்பகுதியில் அலை மிகவும் தாழ்ந்திருக்கும் என அவன் படித்திருக்கிறான். ஆழம் அதிகம் இருந்தால் அலை அதிகம் சுருளாது.

அதிகம் பேசுபவர்கள்; தமது புகழைத் தாமே கூறுபவர்கள்; உரத்துப் பேசினால் பொய்யும் உண்மையாகிவிடுமென்று கருதி அவ்வாறு பேசுபவர்கள்; பிறரைக் குற்றங் கூறுவதையே தொழிலாகக் கொண்டவர்கள் இந்தத் தத்துவத்தை உணர்வதாக இல்லை.

1) இந்தப் பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை உமது நடையில் 30 சொற்களுள் சுருக்கி எழுதுக.
2) இத் 'தத்துவம்' என ஆசிரியர் எதனைக் கூறுகின்றார்?
3) இந்தப் பகுதியூடாகச் சமூகத்திடம் எதனை வேண்டுகிறார்?

ஆ) அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்
கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்

1) இந்தச் செய்யுள் கூறும் கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்குக் குறையாமல் விரித்தெழுதுக.
2) இந்தச் செய்யுளூடாகப் புலவர் எமக்கு எதனை உணர்த்துகிறார்.
(15 புள்ளிகள்)

03) மேல்வரும் பதினைந்து வினாக்களும் (அ), (ஆ), (இ),(ஈ) என நான்கு பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமிருந்து ஆகக் குறைந்தது ஒவ்வொரு வினாவையேனும் தெரிந்து எல்லாமாக பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

அ)1) த்,ப்,ஐ,ஔ ஆகிய எழுத்துக்களின் இனவெழுத்துக்களைத் தருக.
2) தெய்வம் தொழாஅள்- இந்தத் தொடரில் இடம் பெற்ற சார்பெழுத்துக்களை வகை சுட்டியெழுதுக.
3) வகரமெய் குற்றுயிர்களுடன் சேர்ந்து மொழி முதலாக வருவதற்கு இரு உதாரணங்களும்,நெட்டுயிர்களுடன் சேர்ந்து மொழிமுதலாக

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

வருவதற்கு இரு உதாரணங்களும் தருக.

4) கடர்,முன்றில் இவையிரண்டும் எவ்வகைப் போலிகள்?
5) ஒன்பது + நூறு என்பதனைப் புணர்த்தி விகாரங்களைக் குறிப்பிடுக.

ஆ)6) விரவுத் திணைக்கு இரு உதாரணம் தருக.
7) இது நமது வீடு
இது எங்களது வீடு
இந்த வாக்கியங்களில் நம்,எங்கள் என்பன எவ்வகைப் பெயர்கள்?
8) பக்கத்துக் கிழுவமர வேலியைத் தாண்டி நாலைந்து பேர் ஓர் முயலைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தார்கள். இந்த வாக்கியத்திலுள்ள துணை வினைகளையும், முதல் வினைகளையும் குறிப்பிடுக.
9) பார்த்தான்,சிரித்தான்,படித்தான்,போனான் இவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினைகள் யாவை?
10) குழூ உ குறிக்கு இரு உதாரணம் தருக.
11) மலர் விழி,மலர்வாசம் என்பன எவ்வகைத் தொகைகள்?

இ) 12) அ) அப்பா நாளைக்கு வருவார் என்று தம்பி சொன்னான்.
ஆ) நான் தமிழும்,அளவையியலும் படிக்கிறேன்.
இ) குமாரும், நிமாலும் நண்பர்கள். இவற்றுள் கூட்டு வாக்கியம் யாது? கலப்பு வாக்கியம் யாது?
13) கடிநகர், கடிபேடி கடிமலர்,கடிமார்பு என்பனவற்றில் 'கடி' உரிச்சொல் எவ்வகைப் பொருளைத் தந்துள்ளது?
14) உலகமே எதிர்த்தாலும் நினைத்ததை முடிப்பேன்.இதில் இடம் பெற்றுள்ள இடைச்சொல் யாது? என்ன பொருளில் வந்துள்ளது?
15) நான் நாளைக்குக்கொழும்புக்குப் போகிறேன்.இந்த வாக்கியத்தில் இடம் பெற்ற வழுவைச் சுட்டிக் காட்டித் திருத்தி எழுதுக.

## பகுதி - 11

04) அ) சங்கமருவிய கால அறநூல்களைத்தருக.
ஆ) சங்கமருவிய கால இலக்கியங்களின் பிரதானமான பண்புகளைத் தருக
இ) சங்கமருவிய காலத்திற் பெருவாரியான அறநூல்கள் எழக்காரணியாக அமைந்தவற்றை விபரிக்குக.

05) அ) சங்ககால இலக்கியங்களின் பொருள்மரபினைச் சுருக்கமாக விபரிக்குக.
ஆ) சங்ககால இலக்கியப் போக்கிற்கும் சோழப் பெருமன்னர் கால இலக்கியப் போக்கிற்குமான ஒற்றுமைகளைத் துலக்குக.

06) அ) 20 ஆம் நூற்றாண்டின் இலக்கியப்போக்கை விபரிக்குக.
ஆ) கல்கி அல்லது பாலகுமாரனின் நாவல் பண்புகளைத் தருக.

## பகுதி - 111

07) அ) 17ஆம்நூற்றாண்டு வரையான இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) ஈழத்திலக்கிய வரலாற்றில் கிறிஸ்தவசார்பான இலக்கியங்களின் வளர்ச்சியைத் தருக.

08. அ) சுதந்திரத்திற்குப் பிந்திய ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியை விளக்குக.
ஆ) அச்சியந்திர வளர்ச்சி ஈழத்துத்தமிழிலக்கிய வளாச்சியில் பெற்ற செல்வாக்கை மதிப்பிடுக.

09) பின்வருவோரில் யாரேனுமிருவர் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.
அ) தவத்திரு தனிநாயகம் அடிகளார்
ஆ) பேராசிரியர் வி.சிவஞானசுந்தரம் (நந்தி)
இ) புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை
ஈ) யாழ்ப்பாணம் பதிறுத்தீன் புலவர்
உ) அறிஞர் சித்திலெவ்வை

குறிப்பு: தனிநாயகம் அடிகளாரைக் கட்டுரையாக எழுதியும் பயிற்சி பெறலாம்.

**திரு.நாக. தமிழிந்திரன் PGDE**
**யாழ்.மத்திய கல்லூரி.**

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## பொதுச்சாதாரண பரீட்சை

(03.03.2006 ஆம் திகதிய தொடர்ச்சி....)

26. கலா குறிப்பிட்ட இடத்தில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இன்னொரு இடத்துக்கு மணிக்கு 60 கிலோமீற்றர் சராசரி வேகத்தில் செல்கிறாள். திரும்பி வரும்போது சராசரி வேகம் மணிக்கு 40 கி.மீற்றர் ஆகும். முழு பயணத்தின் போதும் அவரது சராசரி வேகம் யாது?
1) 40கி.மீற்றர் 2) 48 கி.மீற்றர் 3) 50 கி.மீற்றர் 4) 68 கி.மீற்றர்

27. ஒரு கூடையில் உள்ள தேசிக்காய்கள் ஒவ்வொரு நிமிட முறையும் இரட்டிக்கும். 3600 செக்கனில் அந்தக்கூடை நிரம்பி விட்டதெனின் அந்தக் கூடையின் அரைவாசி எப்போது நிரம்பியிருக்கும்?
1) 30 ஆவது நிமிடத்தில் 2) 31 ஆவது நிமிடத்தில்
3) 59 ஆவது நிமிடத்தில் 4) 60 ஆவது நிமிடத்தில்


28. இடைவெளியில் வரவேண்டிய எண்யாது?
3, 1, 1/3, 1/9, ........
1) 1/81 2) 1/27 3) 27 4) 81


29. 0, 7, 26, 63, 124, ........
1) 243 2) 215 3) 189 4) 149

30. 5, 9, 14, 20, ........
1) 27 2) 32 3) 64 4) 28

31. 7, 11, 19, 31, 47, .....
1) 67 2) 54 3) 66 4) 72


32. 1, 8, 16, 25, .......
1) 34 2) 35 3) 77 4) 62

33. கீழ்வரும் உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன.

1) 10 2) 9
3) 8 4) 11


34.

1) 26 2) 25
3) 24 4) 23

35.

1) 29 2) 32
3) 31 4) 30

36. அடுத்து வரும் எண் என்ன?


1) 44 2) 51 3) 13 4) 64

37.


1) 24 2) 38 3) 08 4) 12

A ஆனது 1 ஐ குறித்து நிற்கிறது. B ஆனது 2 ஐ குறித்து நிற்கிறது. ஏனைய ஆங்கில எழுத்துக்கள் அவ்வாறே தொடர்ந்து குறித்து நிற்கின்றன. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

38. L+M
1) 25 2) 26 3) 24 4) 23

39. B+N - Q
1) 1 2) 2 3) -1 4) -2

40. X+ C - T
1) 6 2) 7 3) 9 4) 8

41. C இன் மடங்கு P
1) 47 2) 48 3) 49 4) 50

42. Y - D - R
1) 3 2) 4 3) 2 4) 1

3 அங்குல நீள, அகல, உயரம் உள்ள கனவடிவ மரக்கட்டை ஒன்றைச் சுற்றி வர்ணம் தீட்டப்பட்டது. அது ஒவ்வொன்றும் 1 அங்குல கனவடிவமுள்ள 27 துண்டுகளாக வெட்டப்பட்டது. இந்த 27 துண்டுகளில் -

43. நான்கு பக்கமும் வர்ணம் தீட்டப்பட்ட கட்டைகள்.
1) 1 2) 3 3) 4 4.எவையுமில்லை

44. முப்புறம் வர்ணம் தீட்டப்பட்ட கட்டைகள்.
1) 8 2) 6 3) 3 4) 12

45. இருபுறம் வர்ணம் தீட்டப்பட்ட கட்டைகள்.
1) 08 2) 12 3) 18 4) 10

46. ஒருபுறம் வர்ணம் தீட்டப்பட்ட கட்டைகள்.
1)6 2) 7 3) 8 4) 5

47. ஒருபுறமும் வர்ணம் தீட்டப்படாத கட்டைகள்.
1) 1 2) 2 3) எவையுமில்லை 4) 3

கீழே தரப்படும் வாக்கியங்களில் இரு வசனங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றினூடு மூன்றாவது வசனம் தொடர்புடையது போல் தரப்பட்டுள்ளது.
இதில் மூன்றாவது வசனம் சரி எனின் ''சரி'' எனவும் பிழையாயின் ''பிழை'' எனவும் எதுவும் கூற முடியாது எனின் ''கூறமுடியாது'' எனவும் குறிப்பிடுக.

48. கவாஸ்கர் ஒரு ஆபிரிக்கன்
ஆபிரிக்கர் அனைவரும் விரைவாக ஓடுவர்
ஃ கவாஸ்கர் விரைவாக ஓடுவான் (..............................)

49. இரும்பு ஒரு உலோகம்
கத்தி உலோகத்தாலானது
ஃ கத்தி இரும்பாலானது (..............................)

50. கமால் ஒரு விமானி
விமானிகளில் பலர் ஆண்கள்
ஃ கமால் ஒரு ஆண். (..............................)

51. பாத்திரம் வெள்ளியானது
வெள்ளி ஓர் உலோகம்
ஃ பாத்திரம் உலோகத்தால் ஆனது (..............................)

52. கள்வன் மலையில் இருக்கிறான்
மலை தீவில் உள்ளது
ஃ கள்வன் தீவில் இருக்கிறான். (..............................)

SRILANKA என்பது VULODQND எனின் பின்வருவனவற்றுக்கான குறியீடு யாவை.
53. COMPUTER என்பது?
54. APRIL என்பது?
55. JAFFNA என்பது?

பின்வரும் உரைப்பகுதியை விளங்கி விடை பகிர்க. இந்த வினாக்கள் சரியாயின் 'A' எனவும் பிழையாயின் 'B' எனவும் கூறமுடியாது எனின் 'D' எனவும் குறிப்பிடுக?
''மாடுகள் புல்லைவிட புண்ணாக்கை அதிகம் விரும்பி உண்ணுகின்றன. அத்தோடு வைக்கோலை புண்ணாக்கிலும் குறைவாகவே விரும்பும். அதேவேளை தவிட்டை உண்பதை தவறவிடுவதில்லை''

56. மாடுகள் புண்ணாக்கை அதிகம் விரும்புகின்றன. (.........)
57. மாடுகள் புல்லை மிகக் குறைவாக விரும்புகின்றன. (.........)
58. மாடுகள் தவிட்டை வெறுக்கின்றன. (.........)
59. மாடுகள் புல்லையும் வைக்கோலையும் ஒரே அளவில் விரும்புகின்றன. (....)
60. பொதுவாக மாடுகள் உணவில் வேறுபாட்டை காண்பிப்பதில்லை.(.........)

**குறிப்பு:- பொதுச்சாதாரணப்பரீட்சை வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெளிவரும்.**

**செல்வநாயகம் அருட்குமரன்**
**B.FA,Dip.in com**